# கலையும் இலக்கியமும்

ப. ஜீவானந்தம்

NCBH

IE | RC 14-32
28. VIII 67

For Favour & Review
திராவிடமணி
The Editor

*Sole Distributors:-*
NEW CENTURY BOOK HOUSE (P.) LTD.,
6/30, MOUNT ROAD, MADRAS-2

THE INDIAN EXPRESS LIBRARY
28 AUG 1967
MADRAS

# கலையும் இலக்கியமும்

THE INDIAN EXPRESS LIBRARY
28 AUG 1967
MADRAS.

ப. ஜீவானந்தம்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி). லிமிடெட்.,
6/30, மவுண்ட் ரோடு,
சென்னை—2.

முதற் பதிப்பு : மே, 1967

உரிமை பதிவு

விலை : ரூ. 1–50

அச்சிட்டோர் :
ஜீவோதயம் அச்சகம்
சென்னை-5

# பதிப்புரை

அமரர் ஜீவா அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளின் சுவைமிக்க தொகுப்பு இது.

இத்தொகுப்பு இலக்கியத்தை எப்படிச் சுவைப்பது? கலைகளை எப்படி ரசிப்பது?— இந்த இரு கேள்விகளுக்கும் விடையளிக்கிறது.

'பண்டை இலக்கியங்களில் எதுவும் இல்லை; தீயிட்டுப் பொசுக்கத் தகுந்தவை' என்று கூறுவதோ, 'பண்டையப் படைப்புகளில்தான் எல்லாம் இருக்கிறது' என்று பழம் பெருமையை மட்டும் பேசுவதோ தவறு என்பதை சுட்டிக் காட்டுகிறது இந்நூல்.

இலக்கிய ஏடு 'தாமரை'யில் வெளியான இக்கட்டுரைகளை சேகரித்து உதவிய தோழர் டி. எஸ். நடராஜன் அவர்கட்கு எமது நன்றி உரியது.

— பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| செந்தமிழ்ச் செல்வர் வ.உ.சி. | ... | 1 |
| காலமும் கலையும் | ... | 15 |
| நல்ல இலக்கியமும் நசிவு இலக்கியமும் | ... | 22 |
| உருவமும் உள்ளுறையும் | ... | 29 |
| இலக்கியத்தின் உயிர் | ... | 32 |
| கலை இலக்கியத்துறையில் லெனின் வழி | ... | 40 |
| எழுதவிட்டுப் போனவை | ... | 48 |
| மானிடம் வென்றதம்மா | ... | 59 |
| பாடல் மேதை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | ... | 69 |

# கலையும் இலக்கியமும்

## செந்தமிழ்ச் செல்வர் வ. உ. சி.

ஆசுகவி அரசரான கந்தசாமிக்கவிராயர், நுண்மாண் நுழைபுலமிக்க அரசன் சண்முகனார் தொடங்கி, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் பலர் வ. உ. சிதம்பரனாருக்குப் புகழ்மாலை சூட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய, வ. உ. சி. பற்றிய மதிப்பீடுகளை இங்குக் குறிப்பிட விரும்பவில்லை.

கவியரசனான பாரதி "தமிழகத் தார்மன்னன்" என்று வ. உ. சி. யைப் போற்றுகிறான். கவிமணி, "ஒப்பில்லாச் செந்தமிழ்ச் செல்வன்" என்று வ. உ. சி. யைக் கொண்டாடுகிறார். நாமக்கல் கவிஞர், வ. உ. சி. யிடம், தேசபக்தியோடு "வேதாந்த சித்தாந்த மணமே வீசும்" என்று பாடுகிறார்.

இந்த மூன்று ஜனநாயகப் பெரும் புலவர்களின் மதிப்பீடுகளும் வ. உ. சி. க்குப் பொருந்தும். தமிழகத்தின் தலைவன், செந்தமிழ்ச் செல்வன், தத்துவ ஞானி, என்ற எல்லா நிலைகளிலும் தமிழ் வளர்த்த பெரியார் தான் அவர்.

## பெரும் புலவர்

வ. உ. சி. மதுரை தமிழ்ச் சங்கத்துப் புலவராக விளங்கியவர். அப்படியாயின், அவர், இலக்கிய இலக்கணப் பேரறிஞர் என்று சொல்லத் தேவையில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கம் கண்ட வள்ளல் பாண்டித்துரைத்தேவரின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராக வ. உ. சி. விளங்கினர்.

வ. உ. சி. பன்மொழிப் புலவர். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் வல்லவர். மலையாள மொழியில் ஆங்கில நூல் ஒன்றை மொழி பெயர்த்திருக்கிருர்; அவருக்குத் தெலுங்கும் தெரியும்.

தமிழ்ச் சங்கப் புலமையும், தேசியத் தலைமையும் ஒருங்கு திரண்டு விளங்கிய பெரியார் வ. உ. சி. ஒருவர் தானே?

## அறிஞர்களின் கண்ணில்

"எந்த நூலை எடுத்தாலும், இவர், முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்து புதிய உரை காணுவதிலேயே முயன்றுவருவார். இலக்கணம் முதலிய விலங்குகளை எல்லாம் இவர் அறவே களைந்து எறிந்து விடுவார். துணிகரமும், உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகள் இருத்தல் வேண்டும் என்ற பெருங் கருத்துக் கொண்டவர்" என்று வ. உ. சி. யோடு நெருங்கிப் பழகியவரும் இந்த நூற்றுண்டில் தமிழ் மொழியில் தலைசிறந்த திறனுய்வு மன்னராக விளங்கியவருமான பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை கூறுகிருர்.

வ. உ. சி. யை நேருக்கு நேர் நன்கறிந்த மற்றொரு பெரும்புலவரான பெருநாவலர் சோமசுந்தர பாரதியார், "இவர் கூர்த்த மதியும், சீர்த்த நடுநிலை உணர்வும் வாய்த்த வழக்கறிஞர். வள்ளுவர் குறளும், கைவல்ய நூலும் பலகால் பயின்று சொல் வன்மையும், நல்லியல்பும் நிரம்பி நின்றவர் கற்றோர் களிக்கவும் மற்றோர் மகிழவும் உரையாட வல்லவர். அறிவோடு முரணும் குருட்டுக் கொள்கைகளை அறவாதத்தால் அடர்த்து சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர்"—என்று புகழ்கிறார்.

'தமிழ் நாட்டில் தேசீய இயக்கம் நிலைபெறுவதற்கு ஒரு பெரும் காரணபூதராக விளங்கிய சிதம்பரம் பிள்ளைக்கு எனது வாழ்க்கையை உருவாக்கியதிலும் ஒரு முக்கியமான பங்கு உண்டு" என்று கூறி நன்றியறிதலுடன் வ. உ. சி. க்கு வணக்கம் செலுத்துகிறார் பேரறிஞர் பி. ஸ்ரீ.

டாக்டர் மு. வ., வ. உ. சி.யை "நாட்டு விடுதலைக்கு ஓயாது உழைத்த சிறந்த வீரர்; மொழிப் புலமை நிறைந்து உரை நடையிலும் செய்யுளிலும் நூல்கள் இயற்றியவர்; பழந்தமிழ் இலக்கியங்களுக்குப் புது விளக்கம் எழுதியவர்; தொல்காப்பியத்தின் பழைய உரையைப் போற்றி வெளியிட்டவர்; ஜேம்ஸ் ஆலனின் சில ஆங்கில நூற்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர்; மெய்யுணர்வு நூல்களைக் கற்றுத் தெளிந்தவர்" என்றெல்லாம் வியந்து பேசுகிறார்.

இவ்வாறு புகழப்படுகிற வ. உ. சி. பதிப்பாசிரியர், உரையாசிரியர். நூலாசிரியர், மொழி பெயர்ப்பாசிரியர், தத்துவஞான ஆசிரியர், மனிதத்துவ ஆசிரியர் என்ற

நிலைகளில் நின்று தமிழ் இலக்கியப் பணி புரிந்துள்ளார்.

## பதிப்பாசிரியரும் உரையாசிரியரும்

தமிழ்ப் பெருந்தகையான வ. உ. சி. தமிழுக்குப் பலமுனைப் பணி புரிந்துள்ளார். அவரிடம் சுடர்விட்டு ஒளிர்ந்த இலக்கிய—இலக்கணப் பேரறிவு, திருக்குறள் தொல்காப்பியம் ஆகிய தன்னேரிலாத தமிழ்ப் பெரும் நூல்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டின் மூலம் காட்சி அளிக்கிறது.

## திருக்குறள்

கோவை சிறைக்கூடத்தில் திருக்குறளை மென்று மென்று கற்ருர். விளைவாகச் சிலபல முடிவுகளுக்கு வந்தார்.

கடல போன்ற கல்வி நலமுடைய பரிமேலழகர் தீட்டிய திருக்குறள் உரையில் பல குறைகள் இருக்கின்றன என்ருர் வ. உ. சி.; வள்ளுவப் பேராசானின் மூலத்திற்கு நேர் பொருள் கொள்ளாமல், பரிமேலழகர் வலிந்து பொருள் கொண்டு வள்ளுவத்திற்கு மாருகத் தம் கருத்துக்களைப் பலபட வெளியிட்டிருக்கின்ருர் என்று ஆணித்தரமாக எடுத்துக் காட்டினுர் அவர்.

மாருக, மற்ருெரு உரையாசிரியரான மணக்குடவரின் உரையைப் போற்றினுர். அதன் எளிமையை, நேரான போக்கைப் புகழ்ந்தார். அந்த உரையை பிழையறச் சோதித்துப் பதிப்பித்து வெளியிட்டார்.

திருக்குறளுக்கு, வ. உ. சி. தமது ஆராய்ச்சி ஆற்றல் வெளிப்படும் வண்ணமும், பெருமக்கள்

படித்து இன்புறும் வண்ணமும் ஒரு எளிய விளக்க உரை எழுதினார்.

## தொல்காப்பியம்

விடுதலையான பின்னர், சென்னையில் தங்கியிருந்த சில ஆண்டுகளில், 'தொல்காப்பியம்' என்னும் பேரிலக்கண நூலை எழுத்தெண்ணிப் படித்தார்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணனார் இயற்றிய உரை எளிதாக இருத்தல் கண்டு அதைப் பதிப்பித்து வெளியிட முயன்றார். வையாபுரிப் பிள்ளை போன்றாரின் உதவியோடு பல சுவடிகளை ஒப்பு நோக்கி, திருந்திய முறையில் அதனை வெளியிட்டார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை வெளியிடத் துடித்தார். முதல் இரண்டு இயல்களை தமிழகத்தின் முதல் தமிழ் எம். ஏ. பட்டம் பெற்றவரும் தமிழ்ப் பெரியாருமான செல்வகேசவராய முதலியாரின் துணையோடு பரிசோதனை செய்து பதிப்பித்து வெளியிட்டார். மற்றைய ஏழு இயல்களையும் அவரே பதிப்பித்து வெளியிட முடியவில்லை. ஆயினும் சும்மாவிருக்கவில்லை. வையாபுரிப் பிள்ளையை அப்பணியை மேற்கொள்ளும்படி தூண்டினார். அதற்காக, பற்பல ஏடுகள் தேடி அளித்தும் அறிவுரைகள் அளித்தும் வ. உ. சி. உதவினார். அந்தப் பதிப்பு வ. உ. சி. வையாபுரிப் பிள்ளை இருவர் பெயராலும் வெளிவந்தது.

'நன்னிலை' (மூலமும் உரையும்) என்ற நூலை பதிப்பித்து வெளிட்டார். அதற்கு வ. உ. சி. எழுதியுள்ள உரை—எளிய, இனிய உரை.

"சிவஞான போதம்" சைவ சித்தாந்தத்தின் மூல நூல். இதற்கு வ. உ. சி. மிக அருமையான, எளிமையான உரை ஒன்று வழங்கியுள்ளார். அதிலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் அவர் எழுதியுள்ள உரையைப்போல அவ்வளவு தெளிவாகவும் இயல்பாகவும் எழுத, சித்தாந்த உண்மைகளில் தெள்ளறிவும், பிடிமானமும் நிறைய இருப்பவர்க்கு அல்லாது மற்றவர்களுக்கு முடியாது.

## நூலாசிரியர்

வ. உ. சி மெய்யறிவு, மெய்யறம் வள்ளியம்மை சரித்திரம், வலிமைக்கு மார்க்கம்; சாந்திக்கு மார்க்கம், முதலிய பல செய்யுள், உரைநடை நூல்களின் ஆசிரியர். இந்த நூல்களில் தனி மனிதனும், சமுதாயமும்; தூய நல்வாழ்வு பெற தாம் கண்ட உண்மைகளை வடித்துத் தந்திருந்தார்.

"மெய்யறிவு" — கண்ணனூர் சிறைச்சாலையில் வ. உ. சி. வாழ்ந்த காலத்தில் இயற்றப்பட்ட நூல் இது. உடன் வாழ்ந்த அரசியல் கைதிகளில் வேண்டுகோளுக்க இணங்க, மனிதன் வாழ்க்கையில் கொள்ளவும், தள்ளவும் வேண்டிய நன்மை தீமைகளைத் தொகுத்து பத்து வெண்பாக்களாகப் பாடினார் அதை விரிவு படுத்திய நூறு வெண்பாக்களைக் கொண்ட நூல் இந்த "மெய்யறிவு".

"மெய்யறம்" — வள்ளுவத்தை தன்மய படுத்தி வாழ்ந்தவர் வ. உ. சி. அவர் வள்ளுவத்தை எவ்வளவு ஆழமாகக் கற்றவர் என்பதையும், வள்ளுவக் கண்ணோடு தம் கால வாழ்வை எவ்வளவு நுணுக்கமாகக் கற்றார், என்பதையும், அவர் உள்ளத்தில் சுடர் விட்ட

உண்மை ஒளி வாக்கினிலே எவ்வாறு ஒளிவிட்டது என்பதையும் "மெய்யறத்தில்" நாம் காண முடியும்.

வள்ளுவத்தை தம் காலத்திற்கேற்றபடி தமிழருக்குச் சொல்ல விரும்பினார். திருக்குறளை விட சுருக்கமாகவும் எளிமையாகவும், தமிழ்ப் பெருமக்களுக்கு சொல்ல விரும்பினார். "மெய்யறம்" பிறந்தது. முப்பால் கருத்துக்களோடு காலத்திற்கேற்ற கருத்துக்களும் இந்நூலில் ஒளி விடுகின்றன. இந்நூலுக்குச் சிறப்பாயிரம் அளித்த சுவாமி சகஜானந்தர்;

"வள்ளுவர் எல்லை இம் மறைக்கும் எல்லையாம்" என்றும் 'ஏழையும் கற்குமா(று) இயற்றப்பட்டது'. என்றும் இந்நூலைப் பாராட்டுகிறார். இதே கருத்தை ஆசிரியரே "பாயிரத்தில்"

"வள்ளுவர் மறையின் வழி நூல் மெய்யறம்"

என்று நமக்கு இந்நூலை அறிமுகப் படுத்துகிறார்.

"புதியன புகுத்தல்" என்ற கொள்கைப்படி "இல்லமைத்தல்" "உயிர்த்துணை கொள்ளல்" "உயிர்த்துணை ஆளுதல்" "பரத்தையை விலக்கல்" "பரத்தனை விலக்கல்" போன்ற சிலபல அதிகாரங்கள் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

உயிர்த்துணை கொள்ளல் என்ற அதிகாரத்தில்,

"உயிர்த்துணை தன் உயிர்க்(கு);
உதவு எதிர் பால் துணை"

"துணையிழந்தாரை மணப்பது
புண்ணியம்"

"விரும்பாதவரை விரும்புதல் பாவம்"

என்ற அடிகளும், "உயிர்த்துணை ஆகுதல்" என்ற அதிகாரத்தில்;

"இருவருள் அறிவில் பெரியவர் ஆள்க"
"ஆண்பால் உயர்வெனல் வீண் பேச்சு நீக்க"

என்ற அடிகளும், "பரத்தமை விலக்கல்" என்ற அதிகாரத்தில்,

"தன் துணை அலாளை தழுவுவோன் பரத்தன்"
"பரத்தையினும் மிகக் கொடியவன் பரத்தன்"
"பொது மகளாதல் அம்முழுமகனாலே"
"நன் மகன் கெடுதல் அப்புன் மகளாலே"
"மறமெலாம் நிகழ்வது அம்மா பாவியாலே"

என்ற அடிகளும் சிந்திக்கச் சிந்திக்க புதுமை உணர்ச்சி ஊட்டி இன்பம் பயப்பனவாம். "கூடா ஒழுக்கம்" என்ற அதிகாரத்தில் சமுதாய உணர்ச்சியோடு வ. உ. சி. புதிய கருத்துக்களை ஆணித்தரமாக பின் வருமாறு வெளியிடுகிறார்.

"சாமிகளுட் பலர் காமிகளாயினர்"
"தேசிகருட் பலர் ஆசினராயினர்"
"மகந்துகளுட் பலர் இகந்தனர் ஒழுக்கம்"
"தம்பிரான் மறமெலாம் எம்பிரான் அறிவர்"
"போலி அந்தணர் பலர் புரிவர் மறம் இங்கு"

## மொழி பெயர்ப்பாசிரியர்

ஜேம்ஸ் ஆலன் என்ற ஆசிரியர் ஆங்கிலத்தில் எழுதிய இரண்டு நூல்களை "மனம்போல் வாழ்வு,

அகமே புறம்" என்ற தலைப்புக்களில் வ. உ. சி. தமிழ்ப் படுத்தி இருக்கிறார். ஆங்கில நூற்களின் கருத்துக்களை தன்மயப் படுத்தி தமிழ் மண் மணக்க எவ்வாறு தமிழாக்கம் செய்யவேண்டும், என்பதை இந் நூற்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந் நூற்களில் அங்கங்கே குறள்பாக்களை பெய்து கருத்து வெளியீட்டுக்கு ஆற்றல் அளித்திருப்பது சிறந்த கூறாகும்.

## ஆராய்ச்சி ஆசிரியர்

வ. உ. சி. எத்தகைய சிறந்த ஆராய்ச்சித் திறன் படைத்தவர் என்பதை திருக்குறளைப்பற்றி அவர் வெளியிட்ட சில கருத்துக்களால் அறியலாம்.

மிக நன்றாக ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்களையும் கற்றுத் தெளிந்ததன் பயனாக திருக்குறளில் காணப்படும் பாயிரம் வள்ளுவப் பேராசானால் அருளப்பட்டதல்ல என்று துணிகிறார். வள்ளுவர் காலத்திற்குப்பின், உரையாசிரியர் காலத்திற்கு முன் பாயிரத்தில் காணப்படும் நான்கு அதிகாரங்களும் யாராலோ முப்பாலோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று முடிவு கட்டுகிறார். அறத்துப் பாலில் காணப்படுகிற "மெய் யுணர்வு" "துறவு" ஆகிய அதிகாரங்கள் பாயிரத்தில் காணப்படும் "கடவுள் வாழ்த்து" "நீத்தார் பெருமை" ஆகிய அதிகாரங்களை விட மிக மிக உயர்தரமான கருத்துக்கள் செறிந்தவை என்றும் முப்பாலின் கருத்துக்களுக்கு பாயிரத்தின் கருத்துக்கள் தேவையேயில்லை என காரணங்கள் காட்டி தமது முடிவை நிலைநாட்டுகிறார்.

டி. கே. சி. கம்பராமாயணத்தில் "இடைச் செருகல்" காணப்படுகிறது என்று சொல்லுவது போல், வ. உ. சி. திருக்குறளில், இடைச் செருகல் இருக்கிறது என்று சொல்வதும், 'இருக்கிறது' என்று சில அறிஞர்கள் வ. உ. சி. யின் ஆராய்ச்சித் துணிச்சலை இலேசாக தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள். வ. உ. சி. யின் ஆராய்ச்சி முடிவு கிள்ளுக்கீரை அல்ல, ஆழ்கடல் முத்து என்பதே நமது கருத்து.

வ. உ. சி. யின் ஆராய்ச்சித் திறனுக்கு மற்றொரு எடுத்துக் காட்டு: வள்ளுவனையும், கம்பனையும் தமிழர் அனைவரும் கற்கவேண்டும் என்று அவர் அடிக்கடி நண்பர்களிடம் கூறுவதுண்டு. கம்பராமாயணச் சொற்பொழிவிற்கு ஒருமுறை தலைமை தாங்கியபோது வ. உ. சி. 'அது (திருக்குறள்) தர்மசாஸ்திரம். இது (கம்பராமாயணம்) சகோதர தர்மசாஸ்திரம்; அதன் விளக்கம் இது' என்று கருத்துரை வழங்கினார். (பி. ஸ்ரீ. கூறிய தகவல்).

## தத்துவஞான ஆசிரியர்

"திருவள்ளுவரின் திருக்குறள், சிவஞான போதம், கைவல்ய நவநீதம் என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும் சித்தாந்த நூல்களிலும், வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவை என்பது எனது அபிப்பிராயம்" என்று வ. உ. சி., சிவஞான போதம் உரைப் பாயிரத்தில் எடுத்த எடுப்பில் கூறுகிறார். இதிலிருந்து அவருடைய தத்துவஞானம் எப்படிப்பட்டதென்பதும் எவ்வாறு உருவாகியது என்பதும் தெளிவாக விளங்கும்.

மதவேற்றுமை காண்பவர்களும் பேசுபவர்களும் "யான்" "எனது" என்றும் மதவெறி பிடித்த மாக்களே என்றும்' நமது நாடு தற்காலம் இருக்கும் ஒற்றுமையற்ற நிலையில் மதவேற்றுமைகளையோ ஜாதி வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும், தேசத்திற்கு தீங்கு இழைப்பவர்களே என்று அதே உரைப்பாயிரத்தில் குறிப்பிடுகிறார்.

சிவஞானபோத சிற்றுரையால் யான் கண்ட உண்மை' என்ற குறிப்பில் பின்வரும் சில கருத்துக்களை வ. உ. சி வெளியிடுகிறார்;

"இவ்வுலகத்தின் கண்தோன்றி நிலவுகின்ற சமயங்கள் பல, அவற்றுள் கடவுள் இல்லை யென்று சொல்லும் சமயம் ஒன்று. அதனை நாஸ்திக சமயம் என்பர் ஆன்றோர். மற்றைய சமயங்களெல்லாம் கடவுள் உண்டென்று சொல்பவைகளே. அவற்றை ஆஸ்திக சமயம் என்பர் ஆன்றோர். நாஸ்திக சமயத்தினர் அண்டங்களின் அமைப்பும், அண்டங்கள் ஒன்றையொன்று ஒழுங்காகச் சுற்றிவருதலும், ஒவ்வோர் அண்டத்திலும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஒழுங்காக நிகழ்ந்து வருதலும் இயற்கையின் சக்தியால் என்று சொல்லுகின்றனர். ஆஸ்திக சமயத்தினர்களோ அவைகளெல்லாம் ஒழுங்காக நிகழ்ந்து வருதல் கடவுள் சக்தியால் என்று சொல்லுகின்றனர். நாஸ்திகரது இயற்கையைத்தான் ஆஸ்திகர் கடவுள் என்று கூறுகின்றனர் என்று நாஸ்திகரும், ஆஸ்திகரது கடவுளைத் தான் நாஸ்திகர் இயற்கை என்கின்றனர் என்றும் கொள்வரேல் இவ்விரு சமயங்களுள்ளும் வேற்றுமை இல்லை".

"ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கடவுளையே மற்றைய சமயத்தினர்கள் அவர்களுக்கு பிரியமான பெயர்களாலும் வடிவுகளாலும் வணங்குகிறார்கள் என்று கொள்ளின் ஆஸ்திக சமயங்களெல்லாம் ஒன்றே யாய் விளங்கும்."

வள்ளுவம், சித்தாந்தம், வேதாந்தம் ஆகியவை பற்றிய தெள்ளறிவு வ. உ. சி.க்கு எத்தகைய தத்துவப் பார்வையை அளித்தது என்பதை மேலே சுருக்க விளக்கமாகக் கண்டோம்.

வ. உ. சி. யின் தத்துவஞானத்தில், வேதாந்த—சித்தாந்தச் சண்டையில்லை, அதில், சாதி, மத பேதங் கடந்த சமரஸம் காட்சி அளிக்கிறது. ஆஸ்திக சமயங் களெல்லாம் ஒன்றேயாகி விளங்குகிறது. ஆஸ்திக சமயம், நாஸ்திக சமயம் என்ற வேற்றுமை தாண்டிய நிலையும் காணக்கிடக்கிறது. எனவே அவருடைய தத்துவ தரிசனம், எண்ணம்முதல் வாதத்தின் மிக மிக உயர் ரகம் என்னலாம்.

## மனிதத்துவ ஆசிரியர்

கீழே தரும் மூன்று நான்கு அம்சங்களைக் கூட்டிப் பார்த்தால், வ. உ. சி. எழுத்துகளின் அடிச்சரடான 'மனிதப் பண்பியல்' விளங்கும்.

ஒன்று,

தமக்குத் தாமே தலைவர் என்பதை உணராது விதி விதி என்று வீணாகத் துன்பத்தில் ஆழ்ந்து

கிடப்பவர்கள் பெரிய பேதைகள் என்று 'மெய்யறிவில்' பாடுகிறார்.

" விதிவிதி என்று ஆழ்கின்றார் வீணாகத் துன்பில்
விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு—பதி ஒருவன்
உண்டென்று நம்பி ஒருசிலர் இங்கு அன்னாரின்
கண்டறியேன் பேதையரைக் காண்

(மெய்யறிவில்
விதி அறிதல்)

இரண்டு,

திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' இடைச் செருகல் என்ற முடிவுக்கு வருகிறார், "மெய்யுணர்தல்" என்ற அதிகாரத்தைச் சிறப்பிக்கிறார், மெய்யறத்தில் "மெய்யியல்" என்ற ஒரு பகுதியை வகுக்கிறார்.

மூன்று,

'அகமே புறம்' என்ற நூலின் மூலம் வாழ்க்கை ஒழுக்கத்தை—அறக்கொடியை உயர்த்திப் பிடிக்கிறார்.

" அறத்தை அறியா அறிவே மறமாம்;
அறத்தைப் பிழைத்த அறிவே மிருகம்;
அறத்தைப் புரியும் அறிவே மனிதன்;
அறத்தைக் காக்கும் அறிவே கடவுள் " என்கிறார்

நான்கு,

வாழ்விற் தற்சார்புக்கு முதலிடம் கொடுக்கிறார். 'மெய்யறிவு' என்ற நூலில் குறிக்கோள் பாட்டாக பின்வரும் பாட்டைக் காட்டுகிறார்;

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்ந்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும்தான்."

மேற் சொன்னவைகளை ஒட்டு மொத்தம் ஆக்கிப் பார்த்தால் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்' வழிகாட்டிய வள்ளுவப் பேராசான் அடிச்சுவட்டைப் பின்பற்றி வ. உ. சி. மானிடத்தை உயர்த்திப் பிடிக்கிறார் என்பது தெற்றென விளங்கும்.

—'தாமரை' டிச. 60.

## காலமும் கலையும்

"எவ்வதுறைவதுலகம் உலகத்தோடு
அவ்வதுறைவது அறிவு."                    (குறள் 426)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவு இலாதார்."                  (குறள் 140).

இந்த இரண்டு குறட்பாக்களின் சாரம் ஒன்று தான். உலகம் எவ்வாறு வாழ்கிறதோ அவ்வாறு வாழ்வதுதான் அறிவுடைமை; அவ்வாறு வாழக் கற்றுக் கொள்ளாவிட்டால் அது அறியாமை இது தான் கருத்து.

வள்ளுவப் பேராசன் இன்னும் பற்பல கோணங் களிலிருந்தும் 'அறிவுடைமை'யை விளக்கிக் காட்டு கிறான்.

'அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை"    (குறள் 315.)

இங்கு, மற்றவர் துன்பத்தை தன் துன்பம் போல் மதிப்பிட்டு நடப்பதுதான் அறிவு என்கிறான் வள்ளுவன்.

''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள் பண்பிலாதவர்'' (குறள் 997)

இங்கு கூரிய அறிவைவிடப் பண்போடு கூடிய அறிவுதான் சிறந்த அறிவு என்று அறிவுறுத்துகிருன் தமிழ்ப் பேராசான்.

''தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்'' (குறள் 399.)

உலக இன்பத்தில் தன் இன்பத்தைக் காணும் அறிவுதான் கற்றுத் தெளிந்த அறிவு என்று எடுத்துக் காட்டுகிருன் முப்பால் முனி.

''காலத்திற்கு ஒத்து வாழவேண்டும்; பிறர் துன்பம் பொருது வாழவேண்டும்; பண்போடு வாழவேண்டும்; உலகத்தின் இன்ப வாழ்வே தன் இன்ப வாழ்வு என வாழவேண்டும்.''

அன்பும், பண்பும், அறிவும், அருந்தொண்டும் காலத்திற்கு ஏற்றதாக வேண்டும் என்கிறது வள்ளுவம். இதனை வலியுறுத்திய ''ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்'' (குறள் 214.) என்று திருக்குறள் கூறுகிறது.

உலக வாழ்வைத் தெரிந்து பிறர்க்கு உதவுகிறவனே உயிர் வாழத் தெரிந்தவனும். தனி மனிதனையும் சமுதாய வாழ்வையும் இணைத்து, காலத்தோடு வாழக் கற்பிக்கிருன் வள்ளுவப் பேராசான்.

தமிழகத்தில் வள்ளுவனின் இருபதாம் நூற்றுண்டுப் பிரதிநிதி பாரதி. 'அவன் உயிர் பெற்ற தமிழர்,

என்ற பாடலில், காலத்திற்கும் நூலுக்கும் உள்ள உறவைப் பற்றிய ஓர் உண்மையைக் கூறுகிறான். அது என்ன?

"காலத்திற்கேற்ற வகைகள்— அவ்வக்காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும் ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த நாளும் நிலைத்திடும் நூல் ஒன்றும் இல்லை.''

கலை, இலக்கியம் காலத்தைப் புறக் கணித்து வாழ முடியாது. கலையும் இலக்கியமும் அந்தந்தக் கால அனுபவங்களை உண்டு செழுமைப்பட்டுத் தீரவேண்டும். இது பாரதியின் தெளிந்த கருத்தோட்டம்.

வள்ளுவனும் பாரதியும் நம் கண்முன் என்றும் நிற்கட்டும். அப்பொழுது உலகப் பொதுமையும் தமிழகச் சிறப்புமையும் நம்மைவிட்டு மறையாது.

நாம் எந்த யுகத்தில் வாழ்கிறோம்? ஜனயுகத்தில் வாழ்கிறோம். எனவே, இயல்பாகவே நமக்கு மிகத் தேவையான இலக்கியமும் கலையும் மக்கள் இலக்கிய மாகவும் மக்கள் கலையாகவுமே இருக்கவேண்டும். இத்தகைய இலக்கியமும் கலையும் மக்களுடைய நல உரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண் டும். இவை பொதுஜனத் தன்மை வாய்ந்தவை யாக, யதார்த்தக் கண்படைத்தவையாக, தேசியத் தன்மையுடையவையாக அதே பொழுதில் சர்வதேசியத் தன்மை உடையவையாக இருக்க வேண்டும்.

நாம் வாழும் இந்த ஜனயுகம் வாழ்க்கையின் பழைய பாதையில் சல்லிவேர், பக்கவேரோடு மட்டு மல்ல, ஆணி வேரின் அடிமூலம் தொட்டு மாறுதலைக்

கொண்டு வருகிற யுகம். உலகத்தை உண்மையில் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிற மகத்தான சக்தி தன்னிடம் பொதிந்து கிடக்கிறதென்பதை சராசரி மனிதன் சொந்த அனுபவத்தின் வழி தேர்ந்து தெளிகிறான். தெளிந்து தனது தரத்தின் உயர்வில் விழிப்படைகிறான். அவ்வாறு மனிதமதிப்பீடு வான் முகட்டை எட்டிப் பிடிக்கும் யுகம் இந்த யுகம்.

"மனித வர்க்க வரலாற்றில் புத்தம் புது மலைகள் வெடித்து எழுவதும், தூர்ந்து போன பழைய ஆறுகள் கரைபுரண்டோடுவதுமான ஒரு யுகத்தில் நாம்நடமாடு கிறோம்" என்று வால்டர் லோவென்பெல் என்ற அமெரிக்க எழுத்துக் கலைஞன் கூறுகிறான்.

இந்தப் புதிய யுகத்திற்கு உரிய புதிய இலக்கியம் புதியகலை ஆகியவற்றின் மரபு என்ன ?

மனிதப் பண்பியல் (Humanism), மெய்யுணர்வியல் (Realism) ஆகிய இரண்டும் இணைந்த ஒன்று தான் மேற்படி மரபு.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" —(குறள்)

என்றது மனிதப்பண்பியல்

" வேறுள குழுவை யெல்லாம்
மானுடம் வென்றதம்மா !" —(கம்பன்)

என்றது மனிதப் பண்பியல்.

" வையத் தலைமை கொள்" —( பாரதி)

"நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாய்" —(பாரதி)

என்றது மனிதப்பண்பியல்.

"மனிதன்"—இந்தச் சொல் மனிதன் கண்ட சொற்களில் நிகரற்ற சொல்" (மாக்சிம் கார்க்கி) என்றது மனிதப் பண்பியல்.

"இன்றைய நாளைய, வரலாற்றின் படைப்பாளனும் தலைவனும் மனிதனே" என்பது மனிதப்பண்பியல்.

இனி, மெய்யுணர்வியல் என்றால் என்ன ?

குறிப்பிட்ட மனச்சாய்வுக்கும் குரோதத்திற்கும் எதிரிடையானது மெய்யுணர்வியல். பொதுவானதும் அடிப்படையானதுமான பொருளைப் புறக்கணித்து விட்டு, நுண்ணிய விவரங்களை மிகைப்படுத்தி சொல் இறபோக்குக்கு எதிரிடையானது மெய்யுணர்வியல். புகழ்ச்சிச் சொல் மாலைகளுக்கும், போலி அலங்கார வருணனைகளுக்கும் எதிரிடையானது மெய்யுணர்வியல். இக்காலத்தை மாத்திரம் பார்த்து இதன் தொடர்ச்சியாக வருங்காலத்தைப் பார்க்க முடியாத குறுகிய பார்வைக்கு எதிரிடையானது மெய்யுணர்வியல். அது போல் நிகழ்காலம் சென்ற காலத்தின் தொடர்ச்சி என்ற சரித்திர வளர்ச்சியைப் பார்க்க முடியாத அல்லது பார்க்க மறுக்கிற போக்குக்கும் எதிரிடையானது மெய்யுணர்வியல். வறண்ட உணர்ச்சியற்ற சிந்தனைக்கு எதிரிடையானது மெய்யுணர்வியல். மக்கள் பெயரால், மக்களுக்காக மக்கள் சார்பில் செய்யும் விமர்சனத்திற்கு மதிப்பளிப்பது மெய்யுணர்வியல்.

இந்த மக்கள்யுகத்தில் மக்கள் இலக்கியத்திலும் சரி; மக்கள் கலைகளிலும் சரி மேற்கூறிய மனிதப் பண்பியல்-மெய்யுணர்வியல் என்ற மரபு தெளிவும் உறுதியும் அடைந்து வருகிறது.

எனவே, இந்தப் புதிய மரபைப் பிரதிநிதிப்படுத்தும் கலைஞன், "கோடிக் கணக்கான மக்களுக்காக எழுதுகிறேன்" என்ற உண்மை, தன்னால் ஒருகணம் கூட மறக்கக்கூடாத உண்மை என்று உணர்கிறான். அத்தகைய கலைஞன், எழுத்துத் தொழிலில முறை நிறையான மனப் பான்மையைக் கடைப் பிடித்தல்; சொற்களைப் பொறுக்குவதில், கோப்பதில்; இனிமை எளிமை தெளிவு ஆகியவற்றைக் நேர்மையாகக் கடைப் பிடித்தல்; தன்னுடைய அனுபவங்களையும் சிந்தனைகளையும் கோடிக்கணக்கான வாசகர்களின் கவனத்தில் விழச் செய்வதில் எல்லா விதமான நன் முயற்சிகளையும் கடைப் பிடித்தல் ஆகிய கடமைகளை உயர் கடமைகளாகக் கொள்கிறான்.

இந்தப் புதிய இலக்கியமும் புதிய கலைகளும் அவைகளின் தாயகத்தில் மாத்திரமே முளைத்துத் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிதர முடியும். உலக முழுவதற்கும் பொருந்தும் இந்தப் பொது விதி தமிழகத்திற்கும் நன்றாகப் பொருந்தும். ஆகவே, தமிழகத்தில் ஜனயுகப் புது இலக்கியமும் புதிய கலைகளும் தழைத்து முன்னேற வேண்டுமானால் பண்டைப் பண்பாடும் புதிய ஜனநாயக இலக்கியமும் இணைந்து பிணைந்து நிற்க வேண்டும். தமிழகத்தின் தேசிய மரபோடும் தேசிய நடையோடும் தான் இந்த ஜனயுக இலக்கியமும் கலையும் முன்னேற முடியும்.

எனவே நமது கலைஞர்கள் இந்த யுகத்தின் அறத்தை முதன்மையாகக் கணக்கில் எடுக்க வேண்டும். தமிழக வாழ்க்கையின் சகல துறைகளிலும் வெளிச்சம் பாய்ச்சித் திறனாய்வு நடத்த வேண்டும். தமிழ்ப் பெருமக்களின் செழுமை மிக்க அறிவியல், உணர்ச்சி இயல் வாழ்க்கையை நேர்மையாக எதிரொலிக்க வேண்டும். வாழ்க்கையை அதனுடைய இயக்கத்தில் வைத்து புதுமைக்கும் பழைமைக்கும் இடையறாது நடக்கும் போராட்டத்தை வெளிப்படுத்து முறையில் அதன் சகலவித வேறுபாடுகள் மாறுபாடுகளையும் ஓவியம் தீட்டிக் காட்டவேண்டும். இந்த ஓவியப்பிடிப்பில் புதிய ஜனநாயக வாழ்க்கையின் வனப்பையும் சிறப்பையும் அழுத்தம் கொடுத்துக் காட்ட வேண்டும்.

இந்தப் பாதையில் கவிஞன் எழுத்தாளன், நாடகாசிரியன், ஓவியக் கலைஞன் விமர்சனக் கலைஞன் முதலிய யாவரும் எதையும் மூடி மறைக்காமல், வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளுக்கு வழிபாடு செலுத்த வேண்டும்.

''தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார் இங்கு அமரர் சிறப்புக் கண்டார்.''

*தாமரை டிச. '58*

# நல்ல இலக்கியமும் நசிவு இலக்கியமும்

இலக்கியக் கண்ணோட்டத்தில் ஓர் கூரிய மாறுதல் ஏற்பட்டுத் தீர வேண்டிய காலகட்டம் இது.

ஒவ்வொரு தமிழ் மகனும் அவனவன் திறமையையும் சிறப்பாற்றலையும் தங்கு தடையின்றி வளர்த்து, வளப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதை வேறுவிதமாகச் சொன்னால் தமிழகத்தில் சாத்தியமான, ஆனால், செயலற்றுக் கிடக்கிற மூளை, நரம்பு, நாளங்களின் ஆற்றல் அனைத்தையும் செயல் முறையாக மாற்றவும் அதன் ஆக்கல் பண்புகளைக் கிளர்ந்தெழச் செய்யவும் வழிவகை காண வேண்டும்.

இது நடை முறை சாத்தியமே.

ஜனநாயகப் பெரும்வாய்ப்பு நமக்குக் கைவந்துள்ள காலம் இந்தக்காலம். கலாச்சாரத்தின் சகல சாலைகளும் நமது கண்முன்னால் திறந்து விடப்பட்டிருக்கின்றன. கலை, விஞ்ஞானம், தொழில் நுணுக்க இயல், அரசியல் நிர்வாகம் இன்னபிற எல்லாத் துறைகளிலும் தமது ஆற்றலை ஏவி அசுரப்பணி புரியும் பல்லாயிரக் கணக்கான திறமை மிக்க கட்டிளங் காளைகளையும் கன்னியர்களையும் தமிழகம் படைத்தாக வேண்டும்.

அதோடு மற்றொன்று தமிழ் பெருமக்கள் சர்வ வியாபகமான மனித கலாச்சாரத்தின் மறுக்க முடியாத சாதனைகளைத் தன்மயமாக்கிக் கொள்ள வேண்டும். அதே பொழுதில் மறக்க முடியாத பண்டையப் பண்பாட்டின் மாற்றுயர்ந்த அம்சங்களை அடித்தளமாக்கி உறைத்து நின்று கொண்டு தங்களுடைய, தேசிய, ஆனால், உலகு தழுவிய-மனிதப் பண்புகளை தமிழ் மக்கள் துணிகரமாக வளர்த்தாக வேண்டும்.

நாட்டன்பு இல்லாதவன் நடைப் பிணம். அதற்காக கண்மூடித்தனமான தேசபக்தி வேண்டுவதில்லை.

"மக்களின் ஆத்மா"வோடு நெருங்கி உறவாடும் மனவேட்கைதான் வேண்டும்.

"மக்கள் ஆத்மா" என்ற இந்த 'விசாலமான' பெரிய ஆத்மாவின் கோரிக்கையின் சங்கநாதமாகவும், சிங்கநாதமாகவும் இலக்கியம் இருக்கவேண்டும். அதுமட்டும் போதாது. மக்கள் தம் நல்வாழ்வுப் போராட்டத்தில் முன்னோடியாக விளங்கவேண்டும். அதுமக்களின் சுவைகளை வளர்க்க வேண்டும். மக்களின் கோரிக்கைகளை உயர்ந்தபடி இன்னும் உயர்ந்தபடி என்று மென்மேலும் உயர்த்திச் செல்லவேண்டும்.

இத்தகைய ஓர் இலக்கியப் பார்வையோடுதான் நான் இன்றைய தமிழகத்தின் இலக்கியங்களைப் பார்க்கிறேன்.

இலக்கியத்தை அடிப்படையாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்த இரண்டு வகைகள்-ஒன்று நல்ல இலக்கியம்; மற்றொன்று நசிவு இலக்கியம்.

கவிதை, காவியம், கட்டுரை, சிறுகதை, பெருநாவல், நாடகம், விமர்சனம்-எந்த வடிவு கொண்ட இலக்கியத்தை எடுத்துக்கொண்டாலும் இன்று இரண்டு அடிப்படைக் கருத்தோட்டங்கள் ஊடுருவி நிற்கின்றன. இந்தக் கருத்தோட்டங்களின் அடிப்படையிலேயே நான், நல்ல இலக்கியமென்றும் நசிவு இலக்கியமென்றும் இலக்கியத்தை இரண்டாகப் பிரிக்கிறேன்.

## நசிவு இலக்கியம்

சிதைந்து சீரழிந்து வருகிற சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற இலக்கியம், நசிவு இலக்கியம்.

இந்த இலக்கியம்-மூடாத்மா வாதம், இருள் நோக்கு வாதம், மாயாவாதம், நம்பிக்கை வறட்சிவாதம், சர்வ சம்சயவாதம், நரகமிரட்டல் வாதம் முதலான வாதங்கள் சிறுகவும், பெருகவும் தாறுமாறுகக் குழம்பி ஓடும் கருத்தோட்டத்தை எதிரொலிக்கிறது.

இந்தக் கருத்தோட்டக்காரர்கள், சரிந்துவருகிற சமுதாயத்திற்குச் சப்பைக் கட்டு கட்டுவதைப் பார்க்கிறோம். இந்த நொறுங்கி வருகிற பழைய கட்டுக் கோப்புக்கு குரல் கொடுப்பதைக் காண்கிறோம். எனவே நசிவுப் போக்கின் வாய்ப்பறைகளான இலக்கியக் கலைஞர்களால், இன்று ஒரு சிறந்த படையலைக் கூடப் படைத்துத்தர இயலவில்லை என்பதையும் பார்க்கிறோம்.

உள்ளடக்கத்தில் இரத்தம் செத்து வருகிறது; கலைத்திறனில் சீர் சிதைந்து வருகிறது; ஆசிரியர்களின் தரத்தில் இறங்கு முகம் வளர்ந்து வருகிறது. கதாபாத்திரங்களின் வரிசையில் சீரழிவு பொங்கி வருகிறது.

சுருக்கத்தில் இந்த இலக்கியம் மென்மேலும் அழுகி வருகிறதைப் பார்க்கிறோம்.

நசிவு இலக்கியம் ஜனநாயகப் புரட்சியைக் கண்டு பயந்து சாகிறது. பொதுமக்கள் வாழ்வில் ஆர்த்தெழும் முற்போக்கைக் கண்டு அஞ்சி நடு நடுங்குகிறது. பிற்போக்கு சக்திகளின் பாதுகாவலனாக நின்று மனித நாகரிகத்தைப் பழிவாங்க விரும்புகிறது. இந்த இலக்கியம் முன்னேறும் பொதுமக்களை பின்னால் இழுத்து மனிதவரலாற்றில் மிக இருண்ட அநாகரிக யுகத்தில் தள்ள படித்த வித்தையை எல்லாம் காட்டுகிறது.

நாதக் கட்டையாகி, அபசுருதி பேசித் தேய்ந்து வரும் இந்த இலக்கியம் மாயாமயக்குவாதத்தின் கூடாரமாகத் திகழ்கிறது. பொதுமக்கள் உணர்வில் சாதி, மத, நிற, இன, மொழி வெறிகளைக் கிண்டிக் கிளறி நாசகரமான குருட்டாவேசத்திற்கு தூப தீபம் போடுகிறது. இந்த இலக்கியம் மனிதனின் சின்ன உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பித் தடவிக் கொடுத்து வியபசார விவகாரத்தில் அலைக்கும் ஆபாசப் போக்குக்கு அணிகலனாக விளங்குகிறது.

பணத்திபத்தியத்திற்கு விலைப் போய்விட்ட எழுத்தாணிக் கலைஞர்களின் படையல்தான் நசிவு இலக்கியம். இந்த இலக்கியத்தில் நடமாடும் பாத்திரங்கள் எப்படிபட்டவர்கள் என்பது தெரியுமா? திருடர்கள், முடிச்சுமாறிகள், துப்பறிவோர், வியபசாரிகள், கூட்டிக் கொடுப்போர், கொடிய கூட்டத்தார்-இத்தகைய மனிதாவதாரங்கள் தான் வள்ளுவப் பெருந்தகை கிண்டல் செய்யும், 'தேவர்களும்', "மக்களும்" தான்

தலைப்பாத்திரங்களாக பொதுவாகக் காட்சி யளிக்கிறார்கள்.

நசிவு இலக்கியத்தின் அரும்பணி என்ன? இன்றைய சமுதாயத்தின் சீரழிவை மாய வலைவீசி மூடி மறைக்க முயல்கிறது; சமுதாய வாழ்வில் நிகழும் விபரீதங்களை மறைத்து எல்லாம் அன்றிருந்த மேனி அழியாதிருக்கிறதென்று காட்ட வீணாக இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம் செய்யத் துணிகிறது. இந்த இலக்கியம், ஏதேனும் விபரீதம் விளைந்தால் அது சமுதாயச் சீரழிவின் விளைவு என்பதை மறைக்க "எல்லாம் ஆண்டவன் செயல்" என்று ஆறுதல் கூறுகிறது. அது பலிக்காவிட்டால் எல்லாம் நன்மைக்கே என்ற மாயா விநோதத் தேறுதல் கூற முயல்கிறது.

அப்படியானால், நசிவு வழி எழுத்துக் கலைஞர்கள் சூழ்நிலையின் பயங்கர நெருக்கடியைப் பார்க்கவில்லையா? பார்க்கிறார்கள். ஆனால் பார்த்ததும் சர்வ சம்சய வாதத்தில் (Pessimism) நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து விடுகிறார்கள். அதே பொழுதில் இந்தக் கலைஞர்கள், வழிகாண முடியாமல் தங்களை இருளில் புதைத்து வைத்திருக்கும் இரவை விண்முட்டப் புகழ்கிறார்கள். இன்னும் ஒருபடி மேற்சென்று கலையின் உயிரும் உடம்பும் (கொள்கையும் செய்கையும்) சர்வ சம்சய வாதமாகத்தான் இருக்க முடியும் என்று அந்த வாதத்திற்கு சிந்துபாடுகிறார்கள்.

## நல்ல இலக்கியம்

மேற் கூறிய நசிவு இலக்கிய முகாமைச் சேர்ந்த எழுத்துக்கலைஞர்கள் தான் இன்று பெரும்பான்மை

யாகக் காணப்படுகிருர்கள். இவர்கள் நீங்கலாக ஒரு சிறுபகுதியினர் நல்ல இலக்கியக் கலைஞர்களாகக் காணப்படுகிருர்கள்.

நல்ல இலக்கியம் மனித நேர்மையையும் சிறந்த தீர்க்க தரிசனத்தையும் கொண்ட இலக்கியம். எனவே இந்த இலக்கியம் நசிவு இலக்கியம் செல்லும் பாதையில் செல்லாமல் வேறு வழிகளில் வேறு திசைகளில் சென்று சமுதாய முன்னேற்றத்திற்குப் போம் வழிகாண முயல்கிறது.

''நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக் குழைத்தல்
இமைப் பொழுதும்
சோராதிருத்தல்''

என்று பாடிய புலவனின் இலக்கியம்;

''முப்பது கோடியும் வாழ்வோம் வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்''

என்கிறது!

நல்ல இலக்கியம், கோடானு கோடி பாட்டாளிப் பெருமக்களின் விதியோடு தன்விதியை இணைத்துக் கொண்டு அவர்களுடைய புதுயுகப் போராட்டங்களுக்குப் பெருங் கருவியாக விளங்கி புதியவாழ்வை உருவாக்க முயல்கிறது.

''அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன்''

என்ற கருத்தோட்டம் நல்ல இலக்கியத்தின் சிறந்த கருத்தோட்டம்.

நல்ல இலக்கியத்தில் புதிய வாழ்வை உருவாக்குவதில் சதையையும், ரத்தத்தையும், வியர்வைப் பிழிவு ஆக்குகிற ஆண்களும் பெண்களும் தலைமைப் பாத்திரங்களாக நடமாடுகிறார்கள் தொழிலாளர்களும் உழவர் பெருமக்களும் விஞ்ஞானிகளும் கலைஞர்களும் பொறிவலாளர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஜனநாயக நல்வாழ்வு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள முன்னணி வீரர்-வீராங்கனைகள் யாவரும் நல்ல இலக்கியத்தில் முதன்மைப் பாத்திரங்களாக நடமாடுகிறார்கள். நடமாடுவார்கள்.

நல்ல இலக்கியம் சமுதாய முழுமைக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கிறது. இதில் வீரமிக்க உள்ளமும் ஈரமிக்க நெஞ்சமும் நிறைந்து காணக்கிடக்கின்றன.

நல்ல இலக்கியம்—சர்வநிச்சயவாத (Optimism) இலக்கியம். இது வளரும் பாட்டாளி வர்க்கத்தின், வளரும் ஜனநாயகப் பெருமக்களின் இலக்கியம். இன்றைய சமுதாயத்தில் புதுமை மலர்ச்சியும் முற்போக்குணர்ச்சியும் கொண்டு முன்னேறும் சர்வமக்கள் இலக்கியம். ஆகவே தனது அடிநாதம் சர்வ நிச்சய வாதமாகக் கொண்டு அது வலுவேறி வருகிறது. ஒரு புதிய லட்சியத்தை- ஜனநாயக சமதர்மச் சீரமைப்பைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இலக்கியம் இன்றுள்ள சூழ்நிலையில் வளரும்; வலிவு பொலிவும் ஏறும். இது இன்று உலகமெலாம் காணும் காட்சி.

உலகப் பொதுக்காட்சி, தமிழகத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வேறு காட்சியாக இருக்க முடியாது.

—**தாமரை பிப் 59**

THE INDIAN EXPRESS LIBRARY
MADRAS.

## உருவமும் உள்ளுறையும்

அழகுக் கலையின் ஒரு அடிப்படையான பிரச்சினை உள்ளுறைக்கும் உருவத்திற்கும் உள்ள உறவுமுறை ஆகும்.

உருவத்திற்கு முதலிடம் கொடுக்கிறவர்கள் உருவ வாதிகள் (Formalists) என்று அழைக்கப்படுகிறார்கள். உள்ளுறைக்கு முதலிடம் கொடுக்கிறவர்கள் மெய் யுணர்வுவாதிகள் (Realists) என்று அழைக்கப்படு கிறார்கள். உருவவாதிகள் கலைப் படையல்களில் உருவத்திற்கே முதலிடம் கொடுக்க வேண்டும் என்று மட்டுமல்ல, "உத்திகளின்" (Techniques) தொகையே-கூட்டுச் சேர்மானமே - கலைப் படையல் என்றும் சொல்லுகிறார்கள்.

ஆனல் உலகக் கலைகளின் நடைமுறை மேற்படி உண்மையைத் தெளிவு படுத்தவில்லை. உருவவாதி களின் கூற்றுக்கு கோட்பாடுகளுக்குச் சான்று பகர வில்லை.

19-வது, 20-வது நூற்றாண்டுகளின் மெய்யுணர்வு வாதம் (Realism) மனித வர்க்கத்தின் கலை இலக்கிய துறை வளர்ச்சியில் ஒரு மாபெரும் முன்னேற்றப்படி ஆகும். அது உருவத்திற்குத்தான் முதலிடம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றவில்லை.

தமிழகத்திலும் வேதநாயகம் பிள்ளை, இராஜம் அய்யர், சுந்தரம் பிள்ளை, பாரதி, கவிமணி முதலிய தமிழ்ப்பெரு மக்களின் படையல்களை எடுத்துப் பாருங்கள்.

நிகழ்ச்சிகளின் விரைவான மாறுதல்களில் அக்கறையை மையப்படுத்துகிற இலக்கியங்கள், கதை அமைப்புகளில் எதிர்பாராத நெளிவு சுளிவுகளையும் திடீர்த்திருப்பங்களையும் சித்தரிக்கும் இலக்கியங்கள் இவை-எவ்வளவு நேர்த்தியாகவும் மனத்தை அள்ளும் தரத்தனவாகவும் இருந்தாலும் இரண்டாவது வரிசைக்கு உரியன என்றே திறனாய்வாளர்கள் மதிப் பிடுகிறார்கள்.

மாறாக சமுதாய, மனஉலக மதிப்பீடுகளை உறு திப் படுத்துகிற இலக்கியங்களுக்கு திறனாய்வாளர் கள் முதலிடம் கொடுக்கிறார்கள். சமுதாய வாழ்வின் எதிரொலியை விரிவாகவும், மனப்பான்மை, குணச் சிறப்பை ஆழமாகவும் காட்டும்தோறும் சிறந்த மெய் யுணர்வு இலக்கியப் படையல் மென்மேலும் சிறப்பும் பெருமையும் அடைகிறது.

சென்ற கால, நிகழ்கால, மெய்யுணர்வு வாதி களின் இலக்கியப் படையல்களைக் கூர்ந்து கவனித் தால் முழு உண்மை புலனாகும். அவர்கள் கடைப் பிடிக்கும் மெய்யுணர்வுவாத முறை சமுதாய, மன உலக வாழ்வின் உள்ளுறையை துளி கூட தளரச் செய்வதில்லை. மாறாக அவர்கள் உருவாக்கும் பல் வேறு வகையான கலை உருவங்களும், கதை அமைப்புக் கட்டுக்கோப்புகளும் உள்ளுறையை ஆழமாக்கிச் செழுமைப் படுத்துகின்றன.

இத்தகைய உருவத்திற்கும் உள்ளுறைக்கும் உள்ள ஜீவனுள்ள ஒருமைப்பாடு சிறந்த இலக்கியத் திற்கு இன்றியமையாதது. இந்த ஒருமைப் பாட்டில் உள்ளுறைதான் முதலிடமும் தீர்மான ஆற்றலும் உடையதாக விளங்கும். இந்த உருவ-உள்ளுறை ஒருமைப் பாடு உண்மையான கலை இலக்கியப் படையல்களுக்கு நெஞ்சை அள்ளும் அற்புதத் திறனையும் வாழ்வை வள மாக்கும் எல்லையற்ற ஆற்றலையும் அளிக்கிறது.

—தாமரை மார்ச் 59

# இலக்கியத்தின் உயிர்

வரலாற்றில் பொருளை அறிகிறோம், இலக்கியத்தில் அதை உணர்கிறோம். வரலாற்றில் அதைக் கற்கலாம். ஆனால், கதையில் அல்லது கவிதையில் அதைக் கற்பதைவிட அனுபவிக்கிறோம்.

வான நூலார், சந்திர மண்டலத்தை ஆராய்ந்து, பல உண்மைகளைக் கண்டறிகிறார்கள். ஆனால், சிறு குழந்தைகள் அம்புலியைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுகின்றன. ஆராய்வதில்லை. தாவர நூலார் ஆய்வுக் கூடத்தில் செடி கொடிகளை அறுத்து, அக்குவேறு அலகுவேறாகப் பிரித்து அதனுள் பொதிந்து கிடக்கும் உண்மைகளைத் தேடுகிறார்கள். "ஆனால், தன் தாயின் கல்லறையில் படர்ந்துள்ள கொடிகளைப் பார்த்ததும் தாவர ஆராய்ச்சியில் இறங்குவதுண்டோ" என்று ஆங்கில நல்லிசைப் புலவனான ஓர்டஸ்வொர்த் கேட்கிறான்.

ஒரு பிஞ்சுக் குழந்தையை ஒரு உடற்கூறு ஆராய்ச்சி வல்லவர் சோதித்து ஒன்றரை அடி உயரம், 20 அங்குலம் சுற்றளவு, பதின்மூன்று ராத்தல் எடை உள்ள ஒரு தசைப் பிண்டம்! என்று கூறலாம். ஆனால், பெற்றதாய் அப்படியா கூறுவாள்? மறந்தும் கூற மாட்டாள்.

"சீரங்கம் ஆடி,
திருப்பாற் கடலாடி,
மாமாங்கம் ஆடி
மாசிக் கடலாடி
தைப்பூசம் ஆடி
தவம் செய்து பெற்ற கண்ணே !"

என்று அன்பு சொரிந்து அள்ளி எடுப்பாள்.

சைக்கிள் வண்டியை ஒரு பொறிவலார் பார்த்தால் ஒரு சக்கரத்தின் பின் மற்றொரு சக்கரம் ஒழுங்காகச் சுழன்று செல்வதையும் அதன் அமைப்பையும் கண்டு ஆராயத் தொடங்குவார். ஆனால் கவிமணி அப்படியா செய்கிறார்? அல்ல ;

அவர்

"அக்காளும் தங்கையும்போல்

அவை போகும் அழகைப் பார்."

என்று அதைப் பார்த்துக் கொண்டே சொக்கி நின்று விடுகிறார்.

சாதாரண நிலையில் ஒரு பெண்ணைப் பார்க்கும் பொழுது அவள் மானிடப் பிறப்பின் சின்னமாகத் தோன்றுகிறாள். ஆனால், மனம் உணர்ச்சி வசப் பட்டுக் கிடக்கும் பொழுது அதே பெண்,

"ஞானத் திருவடிவாய்
இன்ப மதுக் குடமாய்
கானமதுகரமாய்
கண் நிறைந்த பேரழகாய்"

காட்சியளிக்கிறாள்.

**எனவே, இலக்கியத்தின் உயிர் உணர்ச்சிதான்.**

தலைசிறந்த கலைஞன் பாத்திரத்தில், நிகழ்ச்சியில் தன்னை மீதமிச்சமின்றி கரைத்து விடுகிறான். உணர்ச்சியின் சிகரத்தில் நின்று கொண்டு, பாத்திரமே நிகழ்ச்சியே, குறிக்கோளே பாடுவது போன்று-எழுதுவது போன்று பாடுகிறான்-எழுதுகிறான்.

அவனிடம் 'யான்' 'எனது' என்னும் செருக்கு இல்லை. எனவே, அவன் 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' புகுந்து விளங்குகிறான்.

அவனுக்கு அன்பின் வழியே 'உயிர்' நிலை. அவனுக்கு மக்கள் பண்பே பெரிது. வள்ளுவப் பேராசானும் அதைத்தானே வலியுறுத்துகிறான். ஆகவே, 'அரம்போன்ற கூரிய' அறிவால் 'மக்கட் பண்பை'ப் புறம்காணும் புன் முயற்சியில் ஈடுபடமாட்டான். அறிவுத் திறத்தைக் காட்டுவதுதான் இலக்கியக் கலைப்பணி என்று கருதமாட்டான். நெஞ்சக் கனிவை மென்மேலும் வெளிப்படுத்துவதற்கே முதலிடம் கொடுப்பான்.

கலைஞன் 'யான்' 'எனது' என்ற அகங்காரத்தைக் கரைத்து கலை உருவின் மயமாகி விடுகிறபொழுது, ஒரு துளியே பெருங் கடலாகி விடுகிறது.

ஒரு பாரசீகப் புலவனின் உவமானத்தால் இதை விளக்கிக் கூற விரும்புகிறேன் :

"ஒரு நாள் இரவில் சில வண்ணாத்திப்பூச்சிகள் ஒன்று கூடின அவை விளக்கின் ஒளி பொருந்திய சுவாலையோடு ஐக்கியமாகிவிட வேட்கை கொண்டன.

ஆனால் தீக்கொழுந்தின் தன்மையை யாராவது சென்று பார்த்து வந்தால் நல்லது என்று முடிவு கட்டின. உடனே ஒரு வண்ணாத்திப்பூச்சி எதிர் வீட்டிலிருந்த விளக்கருகே சென்றுவிட்டுத் திரும்பி வந்தது. தான் கண்ட விளக்கொளியை அது விரித்துக் கூறத் தொடங்கிற்று. ஆனால் அந்த வண்ணாத்திப் பூச்சிகளின் தலைவனான பூச்சி விளக்கின் சுவாலை பற்றிய உண்மையான ஞானத்தை அது பெறவில்லை என்று சொல்லிவிட்டது.

எனவே, மீண்டும் மற்றொரு பூச்சி சென்றது. அது விளக்குச் சுவாலையின் வெப்பம் தன்மீது படும் அளவுக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்தது. சுவாலையைப் பற்றிய அதனுடைய விளக்கமும் திருப்தியற்றதாகவே இருந்தது.

ஆகவே, மூன்றாவதாக வேறொரு வண்ணாத்திப் பூச்சி சென்றது: அது விளக்கின் சுடரினுள்ளே நுழைந்துவிட்டது. அதனால் அதன் உடலும் எரிந்து நெருப்பாயிற்று. அந்தச் பூச்சியும் நெருப்பும் ஒன்றாயின.

இதைக் கண்டதும் தலைவனான வண்ணாத்திப் பூச்சி கூறிற்று; "அந்த வண்ணாத்திப்பூச்சி, தான் அறியவேண்டியதை அறிந்துகொண்டது. தன் வாழ்வை அறவே கரைத்து விடுகிறபொழுதுதான் லட்சியத்தை அடைய முடியும். 'யான்', 'எனது' என்ற செருக்கைக் கரைக்கும் வரையில் அன்பின் தகுதியை நீ அறிய முடியாது."

பரிதுத்தீன் அத்தார் மேற்கூறிய உவமானத்தில் காட்டியுள்ளபடி, "தன்னைக் கரைத்துக் காணும் காட்சி

பெருதவரையில் கலை வாழ்வில் வெற்றி பெற முடியாது. தானும் கலைஞனாக முடியாது. கலைஞனைக் காணும் தெள்ளிய பார்வையும் கைவராது. நிறையப் படிப்பதெல்லாம், துருவித் துருவிப் பார்ப்பதெல்லாம் ஒருவனைப் பண்டிதனாக்கும்: அவ்வளவுதான்.''

''அணிசெய் காப்பியம்
ஆயிரம் கற்பினும்
ஆழ்ந்திருக்கும்
கவியுளம் காண்கிலார்''

என்ற பாரதி வாக்கு சிந்தித்துச் சிந்தித்துச் சீர்தூக்கத் தக்கது.

ரொமேன் ரோலான் என்ற பிரஞ்சு நாட்டுப் பெருங் கலைஞன் கீழைய மேலைய நாட்டுப் பண்பாடுகளுக்குப் பாலம் இட்டவன்; உலகப் பண்பாட்டிலும் மனிதனிடத்திலும் பெரும் நம்பிக்கை கொண்டவன். இந்த நூற்றாண்டில் தலை சிறந்த உலகச் சான்றோர்களில் ஒருவனான அவன் தான் எழுதிய ''விவேகானந்தரும் உலக வேதமும்'' (Vivekananda and Universal cospel) என்ற நூலை முடிக்கும் பொழுது பின்வருமாறு கூறுகிறான்.

''கடவுள் தமது படைப்புக்களில் ஆகச் சிறந்த அழகிய படைப்பான ஏழாவது நாளை மனிதனுக்கு அருளினான். உறங்கிக் கிடக்கிற, கட்டுண்ட, ஆத்ம சக்திகளை விடுதலை செய்! மனிதனில் வாழும் கடவுளைத் திரும்பவும் விழிப்படையச் செய்! வாழ்வையே மீண்டும் புதுமையாகப் படை! என்று கூறி ஏழாவது நாளை அருளினான்.''

கலை உள்ளம் உணர்ச்சியின் கொடுமுடியில் நின்றால் அவ்வாறு ஒலிக்கும் என்பது இங்குக் காணக் கிடக்கிறது.

"கவிஞர்கள் தங்களுடைய அறிவுத் திறத்தா லல்ல கவிதைகளைப் படைக்கிறார்கள். படிக்கிறவர்களை உணர்ச்சியும் ஊக்கமும் ஊட்டவல்ல தங்களிடமுள்ள குறிப்பிட்ட இயல்பால் அல்லது மாமேதையாலேயே கவிதைகளைப் படைக்கிறார்கள்."

என்ற சாக்ரடீசின் கருத்தை வியர்சகப் பேரறிஞ ரான அபர்க்ரோம்பி (L. Abrcrombie) தாம் எழுதிய இலக்கிய விமர்சனத்தின் தத்துவங்கள் (principles of Literary criticism) என்ற நூலில் குறிப்பிடுகிறார். இதையே ஒட்ஸ்வொர்த்தும் "ஆற்றலும் விழுப்பமும் வாய்ந்த உணர்ச்சிகள் தன்னிச்சையாகக் கரைபுரண் டோடுவது தான் கவிதை." என்று சொல்கிறார்.

இந்த உண்மைகளை மனதிற்கொண்டு கம்பனின் காப்பியம் ஒரு சுவைஞரை என்ன பாடுபடுத்தியிருக் கிறதென்று பார்க்கவேண்டும். கம்பன் காப்பியம் முழுவதையும் நன்றாக மென்று மென்றுசுவைத்த ஒருவர் ;

"இம்பர் நாட்டில் செல்வமெலாம்
எய்தி அரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கு நீழலிருந்தாலும்
செம்பொன்மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையைப் போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே' என்றார்.

மண்ணுலக விண்ணுலகங்களிலுள்ள எந்த இன்பமும் "கம்பநாடன் கவிதை"யைப்போல் கற்றவர்களின் நெஞ்சத்திற்கு மகிழ்ச்சி ஊட்டாது என்று மிகச் சிறந்த ரசிகமணி ஒருவர் சொக்கிச் சொல்வது அனுபவிக்கத் தக்கது.

மனிதவர்க்கத்திற்கு 'அமுதம் ஈந்த' கம்பநாடன், தனது உணர்ச்சிக் கடலின் மடையைத் திறந்துவிட்டுக் காட்டும் ஓர் இடத்தில் ஒரு பாடலைப் பார்ப்போம்.

இராமன் காட்டுக்கு புகுமுன் பெற்ற தாயான கோசலையிடம் விடைபெற வருகிறான். முதலில், பரதன் நாடாளப்போகும் செய்தியைக் கூறுகிறான். கோசலை மகிழ்கிறாள். அடுத்து, தான் காடேகப் போகும் செய்தியைக் கூறுகிறான். கேட்டதும், கோசலை ஆறாத் துயரத்தில் ஆழ்கிறாள். இராமன் தாய்க்குத் தேறுதல் கூறுகிறான்.

இந்த இடத்தில் காவிய நாயகனான இராமன் வாய்ச் சொல்லாக கம்பன் பாடும் ஒரு பாடல் இதோ;

"சிறந்த தம்பி திருவுற எந்தையை
மறந்தும் பொய்யிலனாக்கி வனத்திடை
உறைந்து பேரும் உறுதி பெற்றேன், இதின்
பிறந்து யான்பெறும் பேறென்ப தியாவதோ?

மறத்தைத் தோற்கடித்து அறத்தைக் காப்பதற்காகத் தோன்றிய யுக நாயகனான இராமன் 'நான் பிறந்ததில் இதைவிடப் பெரும்பேறு வேறு இல்லை" என்கிறான். அந்தப் பேறு குறிப்பிட்ட மூன்று காரியங்களைச் செய்வதுதான் என்கிறான்: தம்பியை அரசாள வைப்பது, தந்தை வாக்கைக்

காப்பது, காடாண்டு மீள்வது இம்மூன்று கடமைகளே தனது வாழ்க்கைப் பேறு என்று 'அறத்தின் மூர்த்தி'யான இராமனைச் சொல்ல வைக்கிறான் கம்பன்.

கதையோடுமட்டும் நான் நின்றுவிட விரும்பவில்லை. கருத்தின், உணர்ச்சியின் ஆழத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.

உழைப்பால், ஒழுக்கத்தால் உதவியால், பண்பால் சிறந்த தம்பிகள் சகல செல்வங்களையும் ஆண்டு அனுபவிக்க விடவேண்டும். முந்தையோர் அறம்—வாழையடி வாழையாக வளர்ந்துவரும் சமுதாய மெய்யறம் பொய்படாது இடை முறியாது காப்பாற்றப்பட வேண்டும். வனத்திடை உறைதல்—நல்ல காரியத்திற்கு ஏற்படும் நானூறு இடையூறுகளையும் உறுதியோடு தாண்டிச் செல்லுதல் வேண்டும்.''

உணர்ச்சிக் கடலான கம்பன் "வேறுள குழுவையெல்லாம் மானுடம் வெல்ல''ப் பிறந்த இராமனாக நின்று வாழ்க்கைக் குறிக்கோளை, தன்னேரிலாத இயல்போடு பாடுகிறான், இங்கு.

—தாமரை ஏப். '59

# கலை இலக்கியத் துறையில் லெனின் வழி

அன்று ரஷ்யாவில் புரட்சியை ஒப்புக்கொண்டு புதிய பண்பாட்டை உருவாக்கி மிகுந்த செல்வாக்குப் பெற்றதாக உரிமை கொண்டாடிய இலக்கியக் குழுக்கள் இரண்டு. ஒரு குழுவினர் "எதிர்கால வாதிகள்" மற்றொரு கலைஞர்கள் பாட்டாளி வர்க்க கலைஞர்கள்". இந்த இரண்டு கூட்டத்தினரும் புதிய கம்யூனிஸ்டு சமுதாயத்தை உருவாக்குவதுதான் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தின் முதலும் முடிவும் என்று பறையடித்தனர்.

ஆனாலும், சரித்திரத்தின் இரக்கமற்ற தர்க்கவியல் சித்தாந்தம் இவ்விரு குழுத்தலைவர்களும் தவறான தத்துவ அடிப்படையில் செயல் பட்டனர் என்றே காட்டிற்று. "எதிர்கால வாதிகளும் பாட்டாளி வர்க்கக் கலைஞர்களும் பரஸ்பரம் மோதிக் கொண்டார்கள். ஆயினும் இருதறத்தாரும் ஆதரித்த அடிப்படையான இலக்கிய அரசியல் கோட்பாடுகளும் உண்மையில் ஒரே கண்ணோட்ட முடையவைகளாகவே இருந்தன.

'கலை இலக்கியத்திற்கும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கும், கம்யூனிஸ்டு கட்சிக்கும், கம்யூனிஸ்ட்

லட்சியத்தை அடைய தொழிலாளி வர்க்கம் நடத்தும் அரசியல் போராட்டத்திற்கும் எந்த வித ஒட்டும் உறவும் இருக்கக் கூடாது. கலை இலக்கியப் பணி சுதந்திரமாக இயங்கவேண்டும், என்று அந்த இரு கூட்டத்தினரும் கருதினர். சென்ற காலப் பண்பாட்டு மரபைப் பொறுத்த மட்டில் அவர்கள் நிராகரிப்பு மனப்பான்மையையே காட்டினர். ஆயினும் இறுதியில் இலக்கியத்தின் மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்தி புரட்சியின் தனிப் பெரும் பிரதிநிதியாக தங்களை ஆக்கிக் கொள்வதில் ஒன்றுபட்ட விருப்பத்தையே காட்டினர்.

1918-ல் எதிர்கால வாதிகள் "கலை இலக்கியத்தை அரசாங்கத்தின் பிடிப்பிலிருந்து விடுவிக்க வேண்டும்' என்று கோரினர்! புதிய இலக்கியத்தின் கலைவளர் மேடை' என்று கூறி அவர்கள் அராஜகக் கருத்தோட்டங்களை முன்வைத்தனர். "கலையின் பழைய உருவங்களையெல்லாம் மிச்ச மீதமின்றி உடைத்து நொறுக்கி பொடி சூர்ணமாக்கி சர்வநாசம் செய்து உலகத்தின் முக மண்டலத்தில் இருந்த இடம் தெரியாமல் செய்து விட வேண்டும் என்பதே பாட்டாளிக் கலைஞர்களின் உறுதியான கனவு' என்று அவர்களுடைய தலைவர்களில் ஒருவர் கூறினார்.

அதே பொழுதில் "பாட்டாளிக் கலைஞர்களோ" ஒரு கொச்சையான சித்தாந்தத்தை வகுத்தனர். அதாவது, புதிய பண்பாட்டை தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே உருவாக்க முடியும் என்றனர். அக்டோபர் புரட்சி தங்கள் முன் வீசியெறிந்த ஆதாரங்களை உண்மைகளை பயன்படுத்த புரட்சி—முற்காலக்

கலைஞர்கள் கையாலாகாது போய் விட்டனர் என்று இவர்கள் அறுதியிட்டுப் பேசினர்.

இந்தப் ''பாட்டாளிக் கலைஞர்கள்'' ஆக்கிய பாடல்களில் பொதிந்து கிடந்த கருத்துக்கள் உயிரற்று வாழ்விலொட்டாத தத்துவார்த்தக் கருத்துக்களாகவே இருந்தன. அந்தக் கருத்துக்கள் தற்கால வாழ்வுக்கு 'ரத்த சம்பந்தம், அர்த்த சம்பந்தம், திக்த சம்பந்தம்,' இல்லாத-சோவியத் நாடு தொடுத்து வந்த மகத்தான, தீவிரமான போராட்டத்திற்கு உறவோ தொடர்போ இல்லாத- கருத்துக்கள். அவை பாறல் நிலத்தில் விளைந்த சண்டு சாவிகள்; அவை இலக்கிய நசிவுக் காட்சி சாலைகளால் நினைவுப் பொருள்களாக வரவேற்கத் தக்க கருத்துக்கள்.

இந்த இருவகைக் கருத்தோட்டக்காரர்களையும் லெனின் தனது உண்மையான விமர்சனக் கோடரிக்கு இரையாக்கினர். அவர்களுடைய சித்தாந்தத்தையும் செயல் பாட்டையும் அக்குவேறு ஆணிவேருகப் பிய்த்துக் காட்டி அவற்றிலுள்ள பொத்தல்களையும் பொள்ளல்களையும் முச்சந்தியில் தூக்கி யெறிந்தார். அவர் வற்புறுத்தினர்: ''பாட்டாளி வர்க்கப் பண்பாடு, எங்கே எப்பொழுது யாரால் பிறந்தது என்று சொல்ல முடியாத ஏதோ ஒன்று அல்ல. அது தங்களை பாட்டாளி வர்க்கப் பண்பாட்டின் நிபுணர்கள் என்று தற்பெருமையடித்துக் கொள்கிற ஒருவரின் கண்டு பிடிப்பும் அல்ல. அப்படிச் சொல்லுவதெல்லாம் கடைந்தெடுத்த மடத்தனம். எதேச்சாதிகார சமுதாயம்; நிலப் பிரபுத்துவ சமுதாயம் ஆகிய சமுதாயங்களில் மனித வர்க்கம் நரக வாதனை அனுபவித்துத் திரட்டிய அறிவுச் செல்வத்

தின் இயல்பான வளர்ச்சியின் விளைவாகத் தான் பாட்டாளி வர்க்கப் பண்பாடு உருவாகி நிற்க வேண்டும்' என்று.

1920-ல் நடந்த அகில ரஷ்ய பாட்டாளி வர்க்கக் கலைஞர்கள் சிறப்பு மாநாட்டிற்கு லெனின் ஒரு நகல் தீர்மானம் தயாரித்தார். அதில் அவர்; பாட்டாளி வர்க்கக் கலைஞர்கள் என்பவர்கள் தங்களுக்காக ஒரு பண்பாட்டைக் கண்டு பிடிக்கும் முயற்சியையும், அவர்கள் ஒரு வரையறுக்கப்பட்ட ஸ்தாபனங்களினுள் மட்டும் தங்களை அடைத்து வைத்துக் கொள்வதையும் அல்லது அவர்கள் தங்களுக்காக ஒரு சுயாட்சியை நிலை நாட்டிக் கொள்வதையும் கொள்கை ரீதியாகப் பிசகானது என்றும், நடைமுறை ரீதியாகக் கேடு விளைவிப்பது என்றும்' குற்றம் சாட்டினர். சோவியத் நாட்டில் உருவாக்கும் பண்பாடு கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசாங்கம் ஆகியவற்றின் நடைமுறைக் கொள்கையிலிருந்தோ சோஷலிச உயர் நோக்கங்களை அடைய முயலும் போராட்டங்களிலிருந்தோ பிரிக்க முடியாதது என்றும் அந்த நகல் தீர்மானத்தில் வலியுறுத்தினர்.

சோவியத் அரசாங்கத்தின் கல்வி முறை முழுவதும்—பொதுவாக அரசியல் கல்வித் துறையிலும் குறிப்பாக கலை இலக்கியத் துறையிலும்—அரசியல் அதிகாரத்திற்கான பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட உணர்வில் தோய்ந்து கிடக்கிறது. அதாவது முதலாளி வர்க்கத்தை முறியடிப்பதில், வர்க்கங்களை இல்லாமல் செய்வதில், மனிதனை மனிதன் சுரண்டும் சுரண்டல் முறைகளை ஒழித்துக் கட்டுவதில்

அந்த உணர்வு தோய்ந்து கிடக்கிறது என்று லெனின் அந்த நகல் தீர்மானத்தில் விளக்கினார்.

இவ்வாறு லெனின் சோவியத் ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் கடுமையாகவும், அதேபொழுதில் நேர்மையாகவும் விமர்சனம் செய்து கலை இலக்கியத் துறையில் வழி காட்டினார். கலை இலக்கியத் துறையில் அரசியல் தன்மையற்ற போக்குகளைச் சாடினார். கொச்சைப் படுத்தும் முயற்சிகளைக் கண்டித்தார். ஏடா கூடப் போக்குகளையும் எதிர்மறை ஓட்டங்களையும் மண்டையிலடித்து மடக்கினார். அதே பொழுதில் நன்மதிப்பிற்குரிய, நேர்மை உணர்வு மிக்க பழைய படிப்பாளிகளை பொதுமக்களோடு நெருங்கி வரச் செய்யவும் புதிய வாழ்வைக் கட்டுவதில் அவர்களையும் இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தவும் லெனின் செம்மையான நடவடிக்கைகள் பல எடுத்தார்.

மகா அக்டோபர் புரட்சியின் உடனடி விளைவுகளில் ஒரு கூறு, கலாச்சாரப் புரட்சி. எனவே, புதிய இலக்கியப் படையலின் நடைமுறை சோவியத் நாட்டின் பொதுவான பொருளாதார அரசியல் கலாச்சார வளர்ச்சிகளோடு இணைந்து பிணைந்து போகவேண்டுமென்று லெனின் வற்புறுத்தினார்.

இந்தக் கலாச்சாரப் புரட்சியின் கடமைகள் எவை? சோவியத் யூனியனிலுள்ள பாட்டாளி மக்கள் அனைவரையும் எழுத்தறிவு பெற்றவர்களாகவும், பண்பட்டவர்களாகவும் செய்ய வேண்டும். எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்கும் திட்டத்தைப் புகுத்த வேண்டும். சோவியத் பொதுமக்களிடமிருந்தே ஒரு படிப்பாளிப் பகுதியை உருவாக்க வேண்டும். சென்ற

காலக் கலைச் செல்வங்கள் யாவும் பொதுமக்களுக்குக் கிடைக்கத் தகுந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இவ்வாறு லெனின் அறிவுறுத்தினார்.

உள்நாட்டுப் போரும் வெளி நாடுகளின் தலையீட்டுப் போரும் நடந்த அந்த பயங்கரமான நெருக்கடி மிக்க ஆண்டுகளில் கலை இலக்கியப் பெருஞ் செல்வத்தைச் சகல மக்களுக்கும் உடைமையாக்க சோவியத் கம்யூனிஸ்ட்டுக் கட்சி மாபெரும் பணி புரிந்தது. உள்நாட்டுப் போரும், தலையீட்டுப் போரும் பட்டினிப் பேயையும் அழிவுச் சனியனையும் சோவியத் நாட்டில் கட்டவிழ்த்து விட்டன. எதிரிகளின் படைகள் சோவியத் குடி அரசை எட்டு திக்குகளிலும் முற்றுகையிட்டு காதறை கூடதறையாகப் பிய்த்தெறிய பேயாட்டம் ஆடின. அந்த நாளிலும் லெனினும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும், சோவியத் அரசும் கலை இலக்கிய மதிப்பீடுள்ள பொருள்களைப் பேணிக்காத்து அவற்றைப் பொதுமக்களுக்குப் பயன்பட செய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர்.

1918-ல் லெனினுடைய முன்முயற்சியில் அரசாங்கப் பதிப்பகம் பற்றிய ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டது. இந்தச் சட்டப்படி முதிர்ந்த பெரும் புலவர்களின் (Classical Authors) இலக்கியப் படையல்கள் யாவும் மக்களின் பொது உடைமையாகப் பறைசாற்ற பட்டன. இந்த இலக்கியப் படையல்களை, கல்வி நிலையங்கள், கலைக் கழகங்களுக்கு முழுப் பதிப்பும், சாதாரண பொது மக்களுக்குச் சுருக்கப் பதிப்புமாக இரண்டு பதிப்புகளை அரசாங்கப் பதிப்பகம் வெளியிட ஏற்பாடாயிற்று. மிகச் சுருங்கிய காலத்தில் மிகச் சிறந்த நூற்கள் சாதாரண மக்கள் வாங்கிப் படிக்கத் தக்க விதத்தில் மலிவு விலைக்குக் கிடைத்தன.

வெளிநாட்டுச் சிறந்த இலக்கியங்களை வெளியிட வும், சோவியத் அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்தது. அரசாங்கக் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் உலக இலக் கியப் பதிப்பகம் ஒன்று நிறுவப் பட்டது. சிறந்த கவி ஞர்கள, உரை நடை எழுத்துக் கலைஞர்கள், மொழி பெயர்ப்பு வல்லுநர்கள், இந்தத் துறையில ஈடுபடுத்தப் பட்டார்கள். இந்தப் பதிப்பகத்திற்கு எழுத்துக் கலை மேதை மாக்சிம் கார்க்கி இயக்குநர் ஆனார். பால் சாக்கும் பெரங்கரும், வால்டேரும் அனட்டோல் பிரான்சும், ஸ்டெந்தாலும், பிளபாரும், பைரனும் டிக்கன்சும், ஜாக்லண்டனும், ஆப்டன் சிங்கிளேலேரும், வெல்சும், ஹீனும், ஷில்லரும், ஹாப்மனும் இன்ன பிற உலகு புகழ் எழுத்துக் கலைஞர்களெல்லாம் சோவியத் மக்களின் கரங்களையும் மதி நலங்களையும் அணி பெறச் செய்தனர். அராபிய; துருக்கிய, பாரசீக, மாங்கோலிய, சீன, ஜப்பானிய, இந்திய இலக்கியங்களும் ரஷ்ய அச்சுவாகனம் ஏறின. உலகக் கலை—இலக்கியம் சோவியத் மக்களின் வாழ்க்கைக்குப் பயன்பட்டன.

லெனின் 1918ல் சோவியத் அமைச்சர் பேரவையில் "உருவச் சிலைப் பிரச்சாரம்" என்னும் தீர்மானம் நிறை வேற்ற வைத்தார். புரட்சி இயக்கத்திலும் விஞ்ஞா னத்திலும், இலக்கியத்திலும்; உலகு புகழ் பெரியார் களுக்குச் சிலை எடுப்பது தான் "உருவச் சிலைப் பிரசாரம்" என்பதன் பொருள்.

தொழிலாளர் — உழவர்களின் அரசாங்கமாகிய சோவியத் அரசாங்கம் நினைவு நாள் கொண்டாடத் தயாரித்த பட்டியல் சிந்தனைக்குச் சுவை மிக்க விருந் தளிக்கும் தன்மையுடையது என்பதில் ஐயமில்லை. இந்த நினைவுப் பட்டியலில்; மார்க்ஸ், எங்கல்ஸ், ஸ்பார்ட்

டகஸ்; டைபெரியஸ், கிராச்சுஸ், மாரட், ரோபஸ்பரி, கரிபால்டி, ஸ்டெப்பான் ரேசின் பெஸ்டல், ராபர்ட் ஓவன் போன்ற பெரியார்களின் பெயர்கள் காணக் கிடக்கின்றன.

இதுமட்டுமல்ல 'புஷ்கின், லெர்மாண்டோவ், கோகோல்; பெலனஸ்கி, லியோடால்ஸ்டாய், ஷெட்ரின், நெக்ரசோவ் போன்ற இருபது ரஷ்ய எழுத்துக் கலைஞர்களுக்கு உருவச் சிலைகள் எழுப்ப வேண்டும் என்று சோவியத் அரசாங்கம் தீர்மானித்தது.

லெனின் அன்று சோவியத் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த லூனுச் சார்ஸ்கியோடு உரையாடிக் கொண்டிருந்த பொழுது, உருவச் சிலைப் பிரச்சாரத்தைப் பற்றி விளக்கம் கொடுத்தார். எப்படி? பின்வருமாறு: "சோஷலிசத்தின் முன்னோடிகளைப் பற்றி அல்லது சோஷலிசத் தத்துவ ஆசிரியர்களையும் சோஷலிசப் போராட்டத் தலைவர்களையும் பற்றி ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும். தத்துவ ஞானச் சிந்தனை, விஞ்ஞானம், கலை இலக்கியம் ஆகியவற்றின் ஒளி விளக்குகளை—அவர்கள் நேரடியாக சோஷலிசத்திற்குத் தொடர்பற்றவராயினும்—கலாச்சாரத்தின் முன்னணி வீரர்களாக விளங்குகிற காரணத்தால் அவர்களைப் பற்றியும் ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும்" என்றார்.

[கலை இலக்கியத்தில் லெனின் வழி என்று ஜீவா எழுதிய ஒரு பெரிய கட்டுரையின் இடையில் ஒரு பகுதி இது]

—தாமரை நவ. '59

## எழுதவிட்டுப் போனவை

பொங்கல் விழா தமிழர் விழாவாக மாறிவிட்டது—புதிய கருத்தில் இந்த விழாவின் உள்ளுறையும் உருவமும் ஆண்டுதோறும் மாறிக் கொண்டேயிருக்கிறது.

விடுதலைக்குப் பின் நாட்டின் அகமும் முகமும் மாறி வருகின்றன. மாறுதலுக்கான வாய்ப்பும் வசதியும் பெருகி வருகின்றன. நாட்டு வாழ்வின் முக்கியமான பல்வேறு துறைகளைப் போல், கலை இலக்கியத் துறையும் குறைத்து மதிப்பிட முடியாத ஒருதுறை.

சில ஆண்டுகளாகவே, தமிழகத்திலுள்ள எனது சகோதர எழுத்துக் கலைஞர்கள் முன் சில கருத்துக்களை வைக்க வேண்டுமென்ற ஆவல் என்னைப் பிடரி பிடித்து உந்திவந்திருக்கிறது. அந்த ஆவலை இந்தப் பொங்கல் புது நாளில் இந்தக் கட்டுரையின் வாயிலாக வெளியிடுகிறேன்.

### யாருக்காக இலக்கியம்?

கவிதை, பாடல், நாடோடிப் பாடல் என்றும், சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, வாழ்க்கை வரலாறு குழந்தை இலக்கியம், திறனாய்வு, வரலாறு, வழிச் செலவு நூல், நீதி நூல் என்றும், அரசியல் பொருளா

தாரம், சமுதாயம், உழவு, தொழில் நுணுக்கம், விஞ்ஞானம், ஆராய்ச்சி என்றும் தமிழ கலை இலக்கியம் பலப்பல கிளைகள் தாங்கி மூலமாகவும் மொழிபெயர்ப்பாகவும் உருவெடுத்து இன்று பரந்து விரிந்து கிடக்கிறது.

கலை இலக்கிய முனையை ஒட்டு மொத்தமாக ஒரு முறை பருந்துப் பார்வையாகப் பார்த்தாலும் ஒரு உண்மை புலனாகும். படித்த நடுத்தரவர்க்க எழுத்தாளர்களும் கலைஞர்களும் இந்த முனையில் பிரதான சக்தியாக விளங்குகிறார்கள். கலை இலக்கியத்தின் பல்வேறு துறைகளையும் பல்வேறு கருத்தோட்டங்களையும் இவர்களே முதலிடம் வகித்துப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.

இவர்களில் சிலர் பலர்க்கு தங்கள் கடமையைப் பற்றிய தத்துவ ரீதியான உணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இவர்களில் ஆழமான கொள்கைத் தெளிவோடு கூடிய படிமானம் உடையவர்கள் அருமையிலும் அருமை என்றே சொல்லவேண்டும் போலிருக்கிறது.

அண்மைக் காலத்தில், குறிப்பாக, நாடு விடுதலை அடைந்த பிறகு ஒரு புதிய இலக்கிய இயக்கம் பொங்கு மாங்கடல் போலப் பொங்கி வருவதைப் பார்க்கிறேன். இந்த இயக்கத்தின் முன்னணி வீரர்களாகக் காட்சியளிக்கும் கலைஞர்கள்—எழுத்தாளர்களில் மிகப் பெரும்பாலோர் நடுத்தரவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் என்பதையும் பார்க்கிறேன்.

இன்று நமது கலை இலக்கியம் யாருக்காக உருவாக்கப் படவேண்டும்? தொழிலாளர்கள், உழவர்கள், சர்வசாதாரண மக்களுக்காகவா? அல்லது படித்த

நடுத்தர வர்க்கத்திற்காகவா? இந்தக் கேள்விகளுக்கு தொழிலாளர், உழவர், சர்வ சாதாரண மக்கள் ஆகியோருக்காகத்தான் இலக்கியம் உருவாக்கப் பட வேண்டும் என்ற பதில்தான் அளிக்க முடியும் இந்த ஜனயுகத்தில் ஜனநாயகத் திசை வழியில் செல்லும் தமிழகத்தில் தெளிவாகத் திட்ட வட்டமாக வேறு பதில் சொல்ல முடியாது.

தொழிலாளர், உழவர், சர்வ சாதாரண மக்களுக்காக மனப்பூர்வமாகப் பணிபுரிவதும் அந்த பெருவாரியான மக்களுக்கே முதல் வரிசை அளிப்பதும் நடுத்தர வர்க்க கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அவ்வளவு எளிதான செயல் அல்ல' இந்த நடுத்தர வர்க்கப் படிப்பாளிகள் தன்னந் தனியாராகவோ அல்லது சின்னஞ்சிறு குழுக்களாகவோ இயங்கிப் பணி புரிந்து பழக்கப் பட்டவர்கள். முதலாளித்துவக் கலை இலக்கியத்தின் தனிநபர் வாதத்தில் நீண்ட காலமாக ஆழ்ந்து ஈடுபாடுகொண்டிருந்தவர்கள். இவையெல்லாம் அவர்களுடைய தனி நபர் பழக்கங்களையும் சிந்தனை ஓட்டத்தையுமே ஊட்டி வளர்க்கும் தன்மையுடையவை. எனவே, பிரச்சினைகளைப் பகுத்துப் பார்ப்பதிலும் அவற்றிற்குத் தீர்வு காண்பதிலும் அவர்களால் பாட்டாளி வர்க்கத்தின் நிலையைக் கைக்கொள்ள முடியாது. நடுத்தரவர்க்கத்தின் நிலையைத்தான் கைக் கொள்ள முடியும், ஆகவே பெருவாரி மக்களுக்குக் கலைத் தொண்டு புரிய வேண்டுமானால் அவர்கள் தங்கள் நடுத்தரவர்க்க நிலையை விட்டுவிட்டு பாட்டாளி வர்க்க நிலையைத் தழுவித் தீரவேண்டும்.

எழுத்துக் கலைஞர்களே! சிறுகதையோ, நாவலோ, நாடகமோ, அல்லது வேறு எந்தப் படையலோ

படைக்க முனைந்த பொழுது நீங்கள் இம்மாதிரிச் சிந்தனையை ஒட்டியதுண்டா? ஒரு சிறிய பகுதி நடுத்தர வர்க்கப் படிப்பாளிகளின் மனப் போக்கை வற்புறுத்திக் கொண்டே லட்சோப லட்சம் புரட்சிகரப் பொது மக்களுக்கு நேர்மையாக ஊழியம் புரிய முடியாது என்ற உண்மையை நீங்கள் இதுவரை மனம் சிலக்க ஆய்ந்ததுண்டா? படிப்பாளிக் கூட்டத்திடம் அனுதாப உணர்வோடும் அவர்களுடைய நிறை குறைகளை மெச்சும் மனப்பான்மையோடும் இருந்து கொண்டு, பாட்டாளி மக்களிடம் முழுக்க முழுக்க அன்பு காட்டாமலும் அவர்களுடைய வாழ்வைத் தெளிவாக அறியாமலும் இருக்கிற நிலைமையில் நின்று பாட்டாளி மக்களைச் சித்தரிக்க முற்பட்டால், தொழிலாளி மக்கள் வேஷத்தில் படிப்பாளிகள் காட்சியளிப்பதாகவே இருக்கும் என்பதை நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா? அடிப்படைப் பெருமக்களைச் சில அம்சங்களில் புகழ்ந்து விட்டு அவர்களுடைய கலை இலக்கியத்தை, அதாவது, அவர்களுடைய நாடோடிப் பாடல்கள், நாடோடிக்கதைகள், சுவர்ச்சித்திரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளிப்படையாகப் பழிப்பதும், மாருக நடுத்தர வர்க்கப் படிப்பாளிகளுடைய-ஏன் முதலாளிகளுடைய கலை இலக்கியத்தைப் பாராட்டித் தேர்ந்தெடுப்பதும் என்ருல் இந்தக் கலைஞர்களின் அந்தராத்மாவின் அடித்தளம் நடுத்தரவர்க்கப் படிப்பாளிகளின் பேரரசாகத்தானே விளங்குகிறது என்று ஒரு முறையேனும் ஒரு பொழுதேனும் நீங்கள் எண்ணியதுண்டா?

இந்தப் பிரச்சினைக்கு முழு நிறைவுத் தீர்வு காண வேண்டுமென்ருல் நடுத்தர வர்க்கக் கலைஞர்களும் எழுத்தாளர்களும் ஒரு கொள்கைச் சீரமைப்பில் ஒன்ருக இறங்கி பாட்டாளிப் பெருமக்களின் எண்ணங்கள்,

உணர்ச்சிகளோடு இரண்டறக் கலந்துவிட வேண்டும். இந்த நன்முயற்சியில் வெற்றி பெற நமது கலைஞர்களும் எழுத்தாளர்களும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கூட நீண்ட துன்பம் நிறைந்த சுய போராட்டத்தை மூச்சுப் பிடிக்கப் போராடியாக வேண்டும். இப்படி எண்ணுவதற்கு உங்களுக்கு மருந்துக்காவது ஒரு வாய்ப்பு ஏற்பட்டதுண்டா?"

பணிவோடு இந்தக் கேள்விகளை உங்களிடம் கேட்டுவிட வேண்டுமென்ற எனது நீண்டநாள் ஆவல் இன்று நிறைவேறுகிறது.

நம்முடைய கலைஞர்களும் எழுத்தாளர்களும் கோடானு கோடிப் பொது மக்களால் மனப் பூர்வமாக, பரிபூரணமாக வரவேற்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் தங்களுடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மாற்றிச் சீரமைத்துக் கொள்ள வேண்டும்.

## கலை–இலக்கியத்தின் ஊற்றுக்கண் எது?

ஒரு குறிப்பிட்ட சமுதாய வாழ்வை மனித மூளை எதிரொலிப்பதன் கொள்கை விளைவுதான் ஒரு கலைப் படையல் அல்லது ஒரு இலக்கியப் படையல். புரட்சிகரக் கலை, இலக்கியப் படையல் என்றால் மக்களின் வாழ்வை புரட்சிக் கலைஞர்களை, புரட்சி எழுத்தாளர்களை, எதிரொலிப்பதன் விளைவே. பொது மக்களின் வாழ்க்கையில் கலை இலக்கியத்திற்கான மூலப் பொருள் சுரங்கம் பொதிந்து கிடக்கிறது. இந்த மூலப் பொருள்கள் இயற்கையான பண்படுத்தப் படாத, உயர்த்துடிப்புள்ள, செழுமையான ஆதார பூர்வமான பொருள்கள்.

எனவே பொதுமக்களின் வாழ்வு, கலை இலக்கிய வளர்ச்சிக்கு வளமான ஊற்றுக் கண்ணாகவும், வற்றாத பொய்கையாகவும் பொலிகிறது. இதுவன்றி வேறு தோற்றுவாய் இல்லை அதற்கு.

அப்படியானால் மக்கள் வாழ்வே கலை இலக்கியத்திற்கு ஈடாகுமா? ஆகாது. மனிதனுடைய சமுதாய வாழ்வுதான் கலை இலக்கியத்திற்கு ஒரே ஊற்றுக் கண்ணாக இருந்தபோதிலும், இது ஒப்பு நோக்குகிற பொழுது கலை இலக்கியத்தை விடத் தெளிவாகவும் செழுமையாகவும் இருந்த போதிலும் மக்கள் சமுதாய வாழ்வோடு திருப்திப் படுவதில்லை; கலை இலக்கியத்தையும் வேண்டுகிறார்கள். ஏன்?

சமுதாய வாழ்வும் சரி, கலை—இலக்கியமும் சரி அழகாகவே இருக்கின்றன. ஆயினும் கலைப்படைப்பிலோ, இலக்கியப் படைப்பிலோ உருக்காட்டுகிற வாழ்வு உயர்தரமானதாக இருக்க வேண்டும். அதிக ஆற்றலும் சிறந்த முறையில் மையப்படுத்தப்பட்டதாகவும் இருக்கவேண்டும்; பொதுமைப்படுத்தப்பட்டதாகவும் லட்சிய நெருக்கம் உடையதாகவும் இருக்க வேண்டும். எனவே அன்றாட வாழ்க்கையில் காண்பதை விட, சர்வவியாபக—சர்வசம்மதமுடையதாயிருக்க வேண்டும்; புரட்சிக் கலை இலக்கியம் எதார்த்த வாழ்க்கையை ஆதார சுருதியாக்கி எல்லாவகையான பாத்திரங்களையும் படைக்கவேண்டும். பொதுமக்கள் சரித்திரத்தை முன்னோக்கி நடத்திச் செல்ல உதவி புரியவேண்டும்.

கலை—இலக்கியத்திற்கு ஒரே ஊற்றுக்கண் சமுதாய வாழ்வாக இருப்பதால் கலை இலக்கியப்

பிரம்மாக்கள் இந்த வாழ்க்கையில் பாய்ந்து முழுகிவிட வேண்டும்.

எனது சகோதர எழுத்துக் கலைஞர்களே! இந் யுகம் மக்கள் யுகம் என்றும் இதில் எல்லாம் வல்ல தலைவர்கள் மக்களே என்றும் புரிந்து தெரிந்து மேற் கூறியபடி சிந்தனை ஓட்டியவர்கள்—காலத்திற்கேற்ற கலைஞர்கள்—உங்களில் எத்தனை பேர் என்று நான் அறியேன்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்" (குறள்)

## கலை இலக்கியத்தின் தரத்தை உயர்த்துவது எப்படி ?

கலை இலக்கியத் தரம் சாதாரணப் பொதுமக்கள் விரும்பும்படி இருக்கவேண்டும், அதைத் தொடர்ந்து பொது மக்களின் கலை இலக்கிய மதிப்பீட்டுத் தரத் தைப் படிப்படியாக உயர்த்த வேண்டும்.

சகல விதப் பாட்டாளிப் பெருமக்களும் விரும்பி வரவேற்கத்தக்க வண்ணம் கலை இலக்கியம் இருக்க வேண்டும். பெருமக்களிடமிருந்து கற்றுக் கொண்டு அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் வகையில் கலைஞர் களின் கடமை செல்ல வேண்டும். சாதாரணப் பாட் டாளியின் தரத்திலிருந்து அவர்களை உயர்த்த வேண் டும். ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றப் பாதையிலேயே அவர்களுடைய தரத்தைக் கலை இலக்கியப் பாணியால் உயர்த்த வேண்டும்.

கலை இலக்கிய உணர்வை பாட்டாளிப் பெருமக்கள் எல்லோரிடமும் கொண்டு செல்வதுதான், அவர்களுடைய கலை இலக்கிய உணர்வுத்தரம் உயர்வதை விட அவசர அவசியமானது.

தொழிலாளர், உழவர், சாதாரண மக்கள் ஏகாதிபத்தியப் பிடிப்பையும் நிலப் பிரபுத்துவ அமைப்பையும் உடைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ வர்க்கங்களின் நீண்ட கால ஆதிக்கத்தால் அவர்கள் படிப்பும் பண்பாடும் அற்றவர்களாகப் பின்தங்கி நிற்கிறார்கள். எனவே விரிந்த அளவில் படிப்பு அவர்களிடம் பரவவேண்டும். பண்பாடு, அறிவு, கலை, இலக்கியம் ஆகியவை உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வேண்டுமென விரும்புகிறார்கள். அவர்கள் போராட்ட உணர்வை உயர்த்தவும், வெற்றியில் நம்பிக்கை ஊட்டவும் அவை தேவை. எனவே, கலை இலக்கியம் இன்று இடுக்கெல்லாம் தங்கு தடையற்ற வகையில் செல்லுமாறு இன்று வேண்டும்.

எனவே, கலைஞர்களும் எழுத்தாளர்களும், நாட்டுப்புறத்துக்கலை உருவங்களுக்குப் பெருமதிப்பு அளிக்க வேண்டும். தொழிலாளர்—உழவர் சாதாரண மக்கள் படைக்கிற கலைப்படையல்கள்—நாடோடிப் பாடல்கள், சுவரொட்டிகள், சின்னஞ்சிறு நாடகக் குழுக்கள் முதலியவற்றில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு மக்களோடு ஒட்டி தங்கள் கலைத்திறனை வளர்த்து ஊட்டம் பெறவேண்டும். அதைவிட்டு கலைஞர்களும் எழுத்தாளர்களும் தங்களுடைய சிறப்பான நிபுணத்துவங்களையே பாராட்டுவதில் அழுத்தம் காட்டுவார்களானால், மக்களையும் எதார்த்தச் சூழ்நிலை

யையும் விட்டுப் பிரிந்து, காற்றில தொங்கும் உயிரற்ற மாளிகைக்கு ஒப்பாவார்கள்.

இந்த மாதிரிக்கருத்தோட்டம் உங்கள் சிந்தனையில் இதுவரையில் தெளிந்ததுண்டோ என்னவோ?

## கலை இலக்கியத்திறனாய்வின் அளவுகோல் எது?

திறனாய்வு இருவகை, ஒன்று அரசியல் தன்மையது. மற்றொன்று கலைத் திறன் பற்றியது.

ஜனநாயக ஒற்றுமையை வளர்ப்பது, பிற்போக்கை எதிர்த்து முன்னேற்றத்தை ஆதரித்து பொது மக்கள் ஒரே கொள்கையோடும் ஒரே உறுதியோடும் போராட ஊக்கம் ஊட்டுவது; ஆகியவற்றைப் பேணிக்காக்கும் கலை-இலக்கியப் படையல்கள் நல்லவை. மாறாக, ஜனநாயக ஒற்றுமையைக் குலைப்பது, மக்களிடையே சாதி, மத, இன, மொழிப் பூசல்களை வளர்ப்பது, முன்னேற்றத்தைத் தடுத்து, பொதுமக்களைப் பிற்போக்கில் தள்ளுவது ஆகியவற்றை ஆதரிக்கும் படையல்கள் கெட்டவை.

உள் நோக்கம், விளைவு ஆகியவற்றைக் கொண்டு தான் நல்லது, கெட்டது என்று பிரித்துக்காட்ட முடியும். தன்னிலை நோக்கோடு, சமுதாய நடைமுறை முறையை மட்டும் கணக்கில் எடுத்து, நோக்கத்தைப் புறக்கணிப்பதும் சரியல்ல. நோக்கத்திற்கும் விளைவுக்கும் இடையில் ஒற்றுமையைக் காண்பதுதான் சரி.

பொது மக்களுக்கு ஊழியம் புரிய வேண்டுமென்ற நோக்கம் பொதுமக்களிடையில் உடன்பாட்டைப் பெறுகிற விளைவிலிருந்து பிரிக்கமுடியாதது.

இரண்டையும், கலைஞர்களும், எழுத்தாளர்களும் இணைக்கவேண்டும். ஒரு கலைப்படையல் நல்லதா கெட்டதா என்று சீர்தூக்க, அந்தப் படையல் மூலம் கலைஞன் என்ன பிரகடனம் செய்கிறான் என்பதல்ல அளவுகோல்; அந்தப்படையல் முக்கியமாகப் பொது மக்களிடமும் சமுதாயத்திடமும் என்ன விளைவை உண்டு பண்ணியிருக்கிறதென்பதுதான் சரியான அளவு கோல்.

அரசியல் கலைக்குச் சமம் ஆகாது. பொதுவான உலகக் கண்ணோட்டம், கலைப் படையல் முறைக்கு ஈடு ஆகாது. மாறாத தத்துவ ரீதியான ஒரு அரசியல் அளவுகோல் என்றோ, மாறாத தத்துவ ரீதியான ஒரு கலை இலக்கிய அளவுகோலென்றோ ஒன்றை ஒப்புக் கொள்ள முடியாது. எனினும் எல்லா வர்க்க சமுதாயங் களிலுமுள்ள எல்லாவர்க்கங்களும், அரசியல் அளவு கோலை முதலாவதாக வைத்து, கலை இலக்கிய அளவு கோலை இரண்டாவதாக வைக்கின்றன. உடையவர்கள் இல்லாதவர்களின் கலை இலக்கிய சாதனைகளை அங்கீ கரிப்பதில்லை.

நாம் விரும்பவேண்டியது அரசியல் கலை இலக்கியத் திற்கிடையில் ஒற்றுமை; உள்ளுறைக்கும் உருவத் திற்கும் இடையில் ஒற்றுமை; புரட்சிகரமான அரசியல் உள்ளுறைக்கும் சாத்தியக் கூறுள்ள ஆக உயர்ந்த தரக் கலைவடிவத்திற்கும் இடையில் ஒற்றுமை. கலைத் தரம் இல்லாத அரசியல் படையல்கள் சக்தியற்றவைக ளாகவே விளங்கும்.

எனவே, கலை-இலக்கியத்துறையில் இரு முகப் போராட்டம் மிக அவசியம்.

இந்தக் கருத்துக்கள், கருத்தோட்டங்கள், எனது சகோதர எழுத்துக் கலைஞர்களே; இந்தப் புதுப் பொங்கல் விழாவில் உங்கள் எண்ண அலைகளில் மிதக்க வேண்டும். தமிழகம் 'காலத்திற்குப் பின்தங்காத' சிறந்த ஜனநாயக எழுத்தாளர்களால் வலிவும் பொலிவும் பெறவேண்டுமென விரும்புகிறேன்.

—'தாமரை' ஜனவரி 61.

THE INDIAN EXPRESS LIBRARY
28 AUG
MADRAS.

## மானுடம் வென்றதம்மா

கமபன் இராமனைக் கடவுள் ஆக்கிவிட்டான் என்பது ஒருகருத்து. கம்பன் இராமனை மனிதன் ஆக்கி விட்டான் என்பது மற்றொரு கருத்து.

ஆனால் கம்பனுடைய இராமனே கடவுளுக் கடவு ளாகக் காட்சி அளிக்கிறான். கடவுள் — மனிதனுகக் காட்சியளிப்பதை விட மனிதக்கடவுளாகக் காட்சி அளிக்கிறான்.

''கல்வியில் பெரியவன் கம்பன்'' எனவே ''நுண் மாண் நுழை புலத்திலும்'' ''அரம்போலும் கூர்மை யிலும்'' கம்பன் தன்னேரில்லாதவன். ஆகவேதான் பாரதி அவன் முயற்சியை,

''எல்லை யொன்றின்மை
எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளால்
காட்டிட முயலும் முயற்சி''

என்று விதந் தோதுகிறான்.

கம்பன் தமிழின் கவிச்சக்கரவர்த்தி; அருட்பெரும் புலவன்; கனிந்த உணர்ச்சிக் கடல். எனவேதான் பாரதி அவனை,

"கம்பன் என்றொரு
மானுடன்"

என ஏற்றிப் போற்றுகிறான்.

'நிகரற்ற மூளைக் கூர்மையும் எல்லையற்ற நெஞ்சக் கனிவும் மிக்க கம்பன் 'கடவுளைக்' காண்கிறான்.

இராமகாதையின் ஆறு காண்டங்களிலும் கம்பனின் கடவுட் காட்சிகள் காப்புப் பாடல்களில் காணக் கிடக்கின்றன.

ஆகப் பெரிய மூளையும் ஆகப்பெரிய நெஞ்சமும் சரிநிகராக வாய்க்கப் பெற்ற 'கம்பன் என்ற மானுடன்' தான் வளர்ந்து வளர்ந்து அவ்வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம் கடவுட் காட்சியை வளர்த்து வளர்த்துக் காட்டுகிறான்.

முதன் முதலில், பால காண்டத்தில், கம்பன்

"உலகம் யாவையும்
தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும்
நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்(டு)
உடையார் அவர்."

பிரபஞ்சம் முழுவதையும் படைத்து, காத்து, அழிக்கும் எண்ணற்ற விளையாட்டுகளை உடைய கடவுளே கம்பன் காட்சியில் தொடக்கத்தில் விழுகிறான். கம்பன் அந்தப் பரம்பொருளைச் சரண் அடைகிறான்.

இரண்டாவதாக அயோத்தியா காண்டத்தில், கம்பன் கடவுளைப் பின்வருமாறு பாடுகிறான்.

"கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக் கோத்துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் காத்த கழல வேந்தை
வானின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும் உளனும்போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப" என்று.

கூனியும் சிறிய தாயும் செய்த கொடுமையால் இராமன் அரசு துறந்தான்; காட்டையும் கடலையும் தாண்டினான். தேவர்களின் துயர்களைத் துடைத்தான். இராமனின் இத்தகைய செயற்கரிய பெருஞ் செயல்களைப் பார்க்கிறார்கள் மக்கள், அவனை ஐம்பெரும் பூதங்களின் உள்ளும் புறமுமாய் விளங்கும் பரம் பொருள் என்று கருதுகிறார்கள்.

இந்தக் கருத்தோட்டம் தன்னைக் காக்கட்டும் என்கிறான் கம்பன்.

இங்கு 'பரம் பொருள்' தியாகசீலமும் செயலாற்றலும் மிக்க இராமனிடத்தில் ஊடுருவி நிற்பதைக் கண்டு கம்பன் வணங்குகிறான்.

மூன்றாவதாக ஆரண்யக் காண்டக் காப்பில், மக்கள் மேற்படிக் தெய்வீகக் காட்சியை எப்படிக் காண்கிறார்கள் என்பது ஆராயப் படுகிறது. கம்பன் 'பரம் பொருளை'க் கீழ்வரும் வண்ணம் கூறுகிறான்.

"பேதியாது நிமிர் பேத உருவம் பிறழ்கிலா
வேதம் வேதியர் விரிஞ்சன்முதலோர் தெரிகிலா
ஆதி தேவர் எம் அறிவினுக்கு அறிவரோ
ஓதி ஓதி உணருந் தொறும் உணர்ச்சி உதவும்"

என்று

பரம்பொருள் பேதா பேதம் அற்றது, வேதமும் வேதியரும் நான்முகனும் அறியாதது; அந்த ஆதி மூலமான தெய்வம் அறிவுக்கும் அப்பாற்பட்ட அறிவுக்கு அறிவானது. இதை மக்கள் எவ்வாறு அறிகிறார்கள்? அறிவுத் திறத்தாலா? அல்ல. பின்?

இராமனுடைய குணாதிசயங்களை மக்கள் திரும்பத்திரும்ப பேசுகிறார்கள். அவற்றைச் சொந்த அனுபவத்தோடு ஒட்டி ஒட்டி உணர்கிறார்கள். உணர உணர உணர்ச்சி பொங்கிப் பெருக்கெடுக்கிறது.

எனவே உணர்ச்சியால் உணர்கிறார்கள். பக்தியால் பார்க்கிறார்கள்.

இங்கு இராமனை மக்கள் பக்தியால் (உணர்ச்சியால்) பார்ப்பதைக் கம்பன் காண்கிறான்.

நான்காவதாக, கிஷ்கிந்தா காண்டத்தில் கம்பன் பின் வருமாறு கடவுட் கொள்கையை விளக்குகிறான்.

'சான்றுரூர் உணர்வினுக்கு,
உவந்தது ஆயினான்!

என்று.

இராமன் மனம் வாக்குக் காயத்திற்கு எட்டாத 'பரமனாக' மக்களுக்குக் காட்சி அளிக்கவில்லை. மாறாக, காணப்படுபவைகளுக் கெல்லாம் சான்றாக இராமன் நிற்கிறான். அதாவது இராமனது இனிய உருவில் அவ்வுருவம் விளங்குகிறது. இதை நினைந்து, நினைந்து உணர்ந்து உணர்ந்து மக்கள் மகிழ்கிறார்கள்.

இங்கு மக்களுக்கு காணுகின்ற காட்சியெல்லாம் இராமனே' என்று கம்பன் காண்கிறான்.

ஐந்தாவது, சுந்தர காண்டகாப்பில் கம்பன்,

‘ அலங்களில் தோன்றும் பொய்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாசப் பாட்டின்
வேறுபாடு உற்ற வீக்கம்
கலங்குவ(து) எவரைக் கண்டால்,
அவர் என்பர்; கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே
மறைகளுக்(கு) இறுதி ஆவர்''

என்று பாடுகிறான்.

‘மாயையால் ஐம்பெரும் பூதங்கள் காரிருளில் கயிற்றரவு போலத் தோன்றுகின்றன. ஆனால் ஞான ஒளி கிடைத்ததும் மாயை அகல்கிறது. காரிருள் நீங்குகிறது. கயிற்றரவு மயக்கம் மறைகிறது; கயிறு கயிறாகவே தோன்றுகிறது. ஞான ஒளியில் நிற்பவன்தான் இராமன். இவ்வாறு மக்கள் கருது கிறார்கள்.

இங்கு கைவில் ஏந்தி இலங்கையில் போரிட்ட இராமனே, மறை முடிவான ‘பரம்பொருள்’ என்று கம்பன் காண்கிறான்.

இறுதியாக, யுத்த காண்டத்தில் கம்பன், தனது தத்துவ தரிசனத்திற்கும் கடவுளுக்குமுள்ள உறவைத் தெளிவாக வெளிப்படுத்துகிறான். யுத்த காண்டக் காப்பில் கடவுளைப் பற்றிய ஒரு யுத்தமே’ நடைபெறு கிறது.

கம்பன் பாடுகிறான் :

"ஒன்றே என்னின்
    ஒன்றேயாம்
பல வென்று உரைக்கில்
    பலவேயாம்
அன்றே என்னில்
    அன்றேயாம்
ஆமே என்னில்
    ஆமேயாம்
இன்றே என்னில்
    இன்றேயாம்
இலது என்று உரைக்கில்
    இலதேயாம்
நன்றே நம்பி குடி
    வாழ்க்கை
நமக்கு இங்கு என்னே
    பிழைப்பு அம்மா"! என்று.

ஒரு கடவுட் கொள்கை பல கடவுட் கொள்கை, மரபுக் கொள்கை, கடவுள் உண்மைக் கொள்கை, கடவுளின்மைக் கொள்கை—ஆகிய கொள்கைகள், ஒன்றே ஒன்று மோதுகின்றன. இந்த மோதலினால் தெளிவுக்குப் பதில் குழப்பமே பெருகிறது. எனவே வெற்றறிவாலான வாதங்களில் பயனில்லை. இவ்வாறு கூறிவிட்டு, கம்பன்;

"நமக்கு வேறு வழியில் பிழைப்பு இல்லை. இராமனின் மனித வாழ்வே கடவுள் வாழ்வு என்று உணர்வோமாக" என அறிவுறுத்துகிறான்.

கம்பன் மக்கள் கண்ணோட்டத்தை கருத்தோட்டத்தை முதன்மைப் படுத்துவதை நெடுகிலும் பார்க்கிறோம். அதோடு கம்பனும் அவனுடைய கடவுட் கொள்கையும் வளர்ந்து மாறுதலடைந்து வருவதையும் பார்க்கிறோம்.

அறிவால் கடவுளை அறிய முடியாது என்கிருன். உணர்ச்சியாலேயே உணர முடியும் என்கிருன். அந்த உருவிலும் அனுபவிக்கத் தக்க குணங்கள் (மனிதப் பண்புகள்) வேண்டும் என்கிருன். அதற்கு இராமனைக் காட்டுகிருன். இராமனில் ஒளி விட்டு நின்ற மனித வாழ்வைக் காட்டுகிருன். இந்த 'மனித வாழ்வு கடவுள் வாழ்வையும் வென்றுவிடுகிறது' என்பதையும் காட்டுகிருன்.

கம்பச் சித்திரம் ஒன்றை இங்குக் காண்போம் :

அனுமன் இராம லட்சும்ணர்களைக் கண்டான். சுக்ரீவனை அணுகி செய்திகளைக் கூறி அவர்களைப் போய்ப் பார்க்கும்படி சுக்ரீவனை அனுப்புகிருன். சுக்ரீவனும் ஆவல் துடிப்போடு இராம லட்சுமணர்களைக் காணச் செல்கிருன்.

சாலையில் ஒரு திருப்பம் திரும்புகிருன். தற்செயலாக நிமிர்ந்து பார்க்கிருன், தூரத்தில் ஒரு குன்றின் முகட்டில் இராமர் லட்சுமணகளிருவரும் நிற்பதைக் காண்கிருன்.

இந்தத் தொலைவுக் காட்சியைக் கம்பன் பின்வருமாறு படம் பிடிக்கிருன்.

கண்டனன் என்ப மன்ளே
கதிரவன் சிறுவன், காமர்க்
குண்டலம் துறந்த வீரக்
கோலமும் குளிர்ந்த கண்ணும்
புண்டரீகங்கள் பூத்துப்
புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த
மரகதக் கிரியனுனே''.

இந்தத் தொலைவுக் காட்சியில் சுக்ரீவனுக்கு இராமன் எப்படித் தோன்றுகிருன் ?

ஒரு பச்சைமாமலை நடந்து வருகிறது. அம் மலையின் முகட்டில் சந்திரோதயம் நிகழ்கிறது- அந்த சந்திரனைச் சுற்றி மேகங்கள் குலவுகின்றன. மேகத்தின் ஊடே தாமரைகள் பூத்துக் கிடக்கின்றன. இவ்வாறு கரிய மேனியில் கண் கமலம், வாய்க் கமலம், கைக் கமலம், கால் கமலம், கன்னக் கமலங்கள் கொழிக்கும் இராம அழகு தொலைவில் காட்சி அளிக்கிறது.

இராமன் இன்னும் அருகில் வருகின்ருன். காதில் குண்டலங்களைக் காணவில்லை: கண்ணில் கருமையின் குளுமை காணப்படுகிறது. அவனுடைய முழுக் கோலமும் 'இவனே வீரன்' என்று வீரனுன சுக்ரீவனுக்கு அறுதியிட்டு உறுதி கூறுகிறது.

இந்தச் சித்திரத்தில் மனிதனின் சாலச் சிறந்த பண்புகளான தியாகச் சிறப்பும் அருட் பிரவாகமும் குண்டலம் துறந்த 'குளிர்ந்த' கண்களையுடைய இராமனிடம் வெளிப்படுகின்றன.

மெல்ல மெல்ல இராமனின் அண்மைக் காட்சி வருகிறது. இதைக் கம்பச் சித்திரம் எப்படிக் காட்டுகிறது தெரியுமா?

''நோக்கினான்; நெடிது நின்றான்,
நொடிவரும் கமலத் தண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம்
அன்று தொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்ததெல்லாம்
குவிந்து இரு வடிவம் ஆகி
மேக்கு உயர் தடம் தோள் பெற்று
வீரராய் விளைந்த என்பான்.''

சுக்ரீவன் இராமனை நோக்குகிறான்; கண் கொட்டாமல் நோக்குகிறான்; நின்ற நிலையிலேயே நெடு நேரம் நின்று நோக்கிய வண்ணமும் சிந்தித்த வண்ணமுமாக நிற்கிறான். முதலில் வீரர்களாய் மட்டும் காட்சியளித்த இராம லட்சுமணர்கள் அருகில் வர வர படைப்புக் காலம் தொடங்கி பாருலகம் செய்த புண்ணியமெல்லாம் திரண்டு இரண்டு இலட்சிய வீரர்களாக காட்சி அளிக்கிறார்கள் என்று சுக்ரீவன் வாய்விட்டுச் சொல்கிறான்.

காட்சி பின்னும் அருகாமையில் வருகிறது. பக்கத்தில் நெருங்க நெருங்கக் காட்சியில் தெளிவு பிறக்கிறது.

சுக்ரீவன் பார்வையில் வைத்து கம்பன் கண்ட தெளிந்த காட்சி இதோ சித்தரிக்கப்படுகிறது.

''தேறினன்; அமரர்க் கெல்லாம்
தேவராம் தேவர் தாமே
மாறி இப்பிறப்பில் வந்தார்
மானுடர் ஆகமன்றே

ஆறுகொள் சடிலத்தானும்
அரி அயன் இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்றதம்மா!''

சுக்ரீவன் தேர்ந்து தெளிகிறான். தேவர்களுக்கெல்லாம் தேவர்களான தெய்வங்களே இந்தப் பிறப்பில் மானிடர்களாக உருவெடுத்து வந்திருக்கிறார்கள் என்று தெளிவடைகிறான்.

அப்படி மட்டுமா தெளிவடைகிறான்? அல்ல. அவனுடைய தெளிவு இன்னும் ஒரு படிமேல் செல்கிறது.

சிவன், அரி, அயன் ஆகிய மும்மூர்த்திகள் முதல் வேறுள்ள எல்லாக் குழுக்களையும் ''மானுடம்' வென்று விட்டது என்று சுக்ரீவன் தேறித் தெளிகிறான்.

'இது கடவுளின் பெருமையல்ல; மனிதனின் பெருமை. கடவுள் மனிதனாக வந்ததல்ல. மனிதன் கடவுள் ஆன பெருமை, மனிதன் கடவுள்களை வென்ற பெருமை, என்று கம்பன் காண்கிறான். தனது மானிட தத்துவ தரிசனத்தை இவ்வாறு சுக்ரீவன் வாய் மொழியாகக் காட்டுகிறான்.

'மனிதன் தன்னையே தனது கடவுளாகச் சித்தரிக்கிறான்' (Man paints himself in his Gods) என்கிறான், ஜர்மானியத் தத்துவப் பெரும ஞானியான ஷில்லன்.

''கம்பன் ஓர் மானிடன்'' என்கிறான் பாரதி.

அந்த மனித மகா மேதையான கம்பன் கண்ட உண்மை என்ன!

'வேறுள குழுவை எல்லாம்
மானிடம் வென்றதம்மா''.

'தாமரை' ஜனவரி, 59.

# பாடல் மேதை
## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

எந்தப் புலவர் பேரவையும், எந்தப் பல்கலைக்கழகமும், எந்தத் தமிழ்த் தெய்வமும் பட்டுக்கோட்டைக்கு மக்கள் கவிஞர் என்று பட்டம் சூட்டவில்லை. மக்கள் மன்றமே அவருக்கு மக்கள் கவிஞர் என்ற பட்டத்தை மனமார வாயார வழங்கிற்று.

1957, 58, 59 ஆகிய ஆண்டுகளில் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதிலும் அவருடைய பாடல்களுக்கு சாதாரணத் தமிழனிடம் ஏற்பட்ட விரைவான வரவேற்பு எந்தக் கவிஞனுடைய பாடல்களுக்கும் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

பட்டுக்கோட்டை ஒரு இயற்கைக் கவிஞர்.

### செயற்கைக் கவிஞரும் இயற்கைக் கவிஞரும்

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்ற தமிழ்ப் பெரியார்களெல்லாம் செயற்கைக் கவிஞர்கள். புலமையில் கவிபாடியவர்கள். பட்டுக்கோட்டைக்கும் இவர்களுக்கும் ஆகாயத்திற்கும் பாதாளத்திற்குமுள்ள தூரம். பட்டுக்கோட்டை சாதாரண தமிழ்ப்படிப்புள்ளவர். அவர் "இயற்கையோடிசைந்த இன்பம், இன்பத்தோடு இசைந்த வாழ்வில்" திளைத்து பாடல் உருவங்களில் கவிதைகள் செய்தார். "கவிதை சொல்பவன் கவிஞன் அல்ல. கவிதை செய்பவனே கவிஞன்" என்ற

சிறந்த ஆங்கில எழுத்துக் கலைஞர் தாமஸ் கார்லைல் கூறிய கூற்றினை நினைப்பில் வைத்துக் கொண்டே பட்டுக்கோட்டை கவிதை செய்தார் என்று கூறு கிறேன்.

இயற்கை வாழ்வை ஊன்றிப் படித்த கவிஞன் பட்டுக்கோட்டை. எடுத்துக் காட்டாக "பொன் விளைந்தபூமி'' என்ற படத்திலிருந்து ஒரு பாடலை நீட்டித்தருகிறேன்.

இந்தப் பாடல் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் உரையாடல் என்ற முறையில் பாடப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணின் பின் ஒரு ஆண் போனதை சாக்காக்கி காரணம் கண்டுபிடிக்க முயல்கிறது இந்தப் பாடல். முல்லைக்கொடி, சிட்டுக்குருவி, ஆடு, பூங்குயில், இவற் றின் வாழ்வு பற்றிய தனது ஆழ்ந்த அனுபவத்தை, கவிஞர் இந்த ஆண் பெண் கூட்டுறவில் மிக அழகாக இணைத்துப் பாடியிருக்கிறார்.

பாட்டைப் பார்ப்போம் :—

பெண் : கன்னியூர் சாலையிலே—பொண்ணு
களை பறிக்கப் போகையிலே—அந்தச்
சின்ன மச்சான் சிவத்தக் கண்ணு—அவ
பின்னாலே எதுக்கு வந்தான் ?

ஆண் : சொல்லாமத்தான் புரிஞ்சுக்கலாமே
ஒரு ஜாடையிலே
உள்ளம் ரெண்டும் ஒண்ணாச்சு — புது
உல்லாசம்தான் கண்டாச்சு (சொல்)

பெண் : சும்மா கிடந்த முல்லைக்கொடி
துள்ளி எதுக்கு ஆடுது

ஆண் : அது சுத்திப்படரக் கொம்பைத் தேடி
துடிச்சுத் துடிச்சு வாடுது

பெண் : தூங்காதே ரெண்டு சிட்டு
தொடர்ந்து என்ன பேசுது?

ஆண் : அது ஜோடியான மகிழ்ச்சியிலே
சொந்தக் கதை பேசுது
சொதந்திரமாக் கூடுகட்டி
ஒருமனமா வாழுது

பெண் : அந்த நிலேயும் இந்த நிலேயும்
சொந்த நிலேயைக் கௌறது
பொல்லாத ஆடு ஒன்று
உள்ளே என்ன பாக்குது?

ஆண் : புதுப் பொண்ணும் மாப்பிள்ளேயும்
பொருத்தமான்னு பாக்குது

பெண் பூங்குயிலும் யாருக்காக
ஏங்கி ஏங்கிக் கூவுது?

ஆண் : ஆண் குயிலேக் காணுமல் தான்
அவசரமாக் கூவுது
அன்புமீறி மயக்கத்திலே
அங்குமிங்கும் பாயுது

பெண : அந்த நிலேயும்

ஆண் : இந்த நிலேயும்

இருவரும் : சொந்த நிலேயைக் கௌறுது

பாடலேத் திரும்பத் திரும்ப பாடி பாடலின் கருத்தைச் சுவைத்தால்தான் பாடல் தேனினும் இனிப்பது தெரியவரும். பட்டுக்கோட்டை இயற்கைக் கவிஞன் என்னும் உட்கருத்தும் விளங்குகிறது.

## ஒரு பாடல் பல நிலேகள்

பெண் : கொடுமையையும் வறுமையையும்
கூடையிலே வெட்டிவை
கொஞ்ச நஞ்சம் பயமிருந்தால்

மூலையிலே கட்டிவை
நெடுங்கவலை தீர்ந்ததென்று
நெஞ்சில் எழுதி ஒட்டிவை
நெருஞ்சிக் காட்டை அழித்து—அதில்
நெல்லு விதையைக் கொட்டிவை''

ஆண் ; ''ஏழைகளின் புது உலகம் தெரியுதடா—நாம்
ஏமாந்துவந்த நிலை ஒழியுதடா

'கவிஞன் என்று நாம் நன்மதிப்புக் காட்டும் ஒருவனிடம் உள்ள சிறப்பு என்னவென்றால் நாம் சொல்ல விரும்புவதை எல்லாம் அவன் ஒருவனே அழகாகச் சொல்லி முடிக்கிறான்', என்று குருதேவர் ரவீந்தரநாத் தாகூர் கூறுகின்றார். மேற்காட்டியவைகளைப் படித்ததும் அல்லது பாடக் கேட்டதும் கோடானுகோடி சாதாரண மக்கள் ''நாம் சொல்ல விரும்புவதை எல்லாம் பட்டுக்கோட்டை ஒருவரே அழகாகச் சொல்லி முடிக்கிறார்'' என்பார்கள்.

''உணர்ச்சி வாயிலாகக் வாழ்க்கையைப் பார்ப்பதே கலை.'' என்கிறான் பிரஞ்சுப் பேராசிரியனாகிய எமிலி ஜோலா. ஜோலாவின் இலக்கணப்படி, மேற்கூறிய பாடலைப் பார்த்தால் பட்டுக்கோட்டை ''சிறந்த கலைஞர்'' என்பதில் ஐயமில்லை.

''உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்குவது கலை'' என்கிறான் தாமஸ் டிக்குன்ஸி என்ற பேர்போன ஆங்கில நாவலாசிரியன். மேற்கூறிய பாடலைப் பாருங்கள். அல்லது பாடக்கேளுங்கள்! ''பட்டுக்கோட்டை உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்கும் கவிஞன்'' என்பது தெள்ளத் தெளிவாகும்.

## கவிதையின் உடலும் உயிரும்

'பொருளே கவிதையின் உடல்; கற்பனையே அதன் உயிர்'' என்கிறான், ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி மன்னனான கோல்ரிட்ஜ். ''கற்பனை! ஆ; இந்த அற்புதமான ஆற்றல் மனிதனிடம் குடிகொள்ளா விட்டால் 'கலை' என்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கவே முடியாது'' என்கிறான், புது உலக இலக்கிய மேதையான மாக்ஸிம் கார்க்கி. தாய்ப் பால்போல் சீக்கிரம் ஜீரணிக்கத் தகுந்த எத்தனையோ அருமையான கற்பனைகளைப் பட்டுக்கோட்டையின் பாடல்களில் பரக்கக் காணலாம்.

''பள்ளம் மேடுள்ள பாதையிலே
பாத்து நடக்கணும் காளைகளே
பழையபோக்கில் பயனில்லை--நல்ல
விஷயமிருக்கணும் மூளையிலே

(கன்னியின் சபதம்)

பாம்பிருந்த காட்டினிலே--இன்று
மான்புகுந்து ஆடுதே

(பாண்டித் தேவன்)

''சத்தங்கள் போடுவதேன்
கங்கையக்கா--நீ
சங்கீதம் கத்துக்கொண்டது
எங்கே அக்கா''

(ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு)

''ஏமாத்து போர்வையிலே
ஏழைகளின் வேர்வையிலே
எக்காளம் போடுற கூட்டம்''

(எல்லோரும் இந்நாட்டு மன்னர்)

"தேன் வேண்டுமா?--இல்லை
நான் வேண்டுமா?"

(தலைகொடுத்தான் தம்பி)

இவன் சோறு போடறான்
அவன் கூறு போடறான்

(கண் திறந்தது)

கடிகார முள்ளின் நடைபோல உள்ளம்
கணம் ஓரிடம் செல்லும் புவிமீது

(குலதெய்வம்)

பக்கத்திலே இருப்பே--நான்
பாத்து பாத்து ரசிப்பேன்
வெக்கத்திலே முளிப்பே--நான்
விஷயம் தெரிந்து சிரிப்பேன்

(தேடிவந்த செல்வம்)

இப்படி எத்தனை எத்தனையோ நெஞ்சில் இன்பம் பெருக்கெடுக்கச் செய்யும் கற்பனைகள்'

## காதலிப்போம்

"கவிஞர்கள் செயற்கைக் கவிஞர்கள் என இரு வகைப்படுகிறார்கள்; முன்னவரை வணங்குவோம். பின்னவரைக் காதலிப்போம்." என்று கூறுகிறான் அமெரிக்கக் ஞானியான எமர்சன். மக்கள் கவிஞரான, இயற்கைக் கவிஞரான பட்டுக்கோட்டையை நாம் நெஞ்சார நேசிக்கிறோம்.

நமது கவிஞரிடம் தமிழ் பெருமக்களுக்குள்ள காதலால்தான், தமிழகம் எங்கும் இதுவரை ஏறக் குறைய ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிஞர் பட்டுக் கோட்டை நினைவுமன்றங்கள் தோன்றியுள்ளன.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் நினைவு என்றும் பசுமையாக தமிழகம் எங்கும் நிலவட்டும்.

அவர்தம் பாட்டுத் திறமும், உயர்ந்த குறிக் கோளும், பண்பாடும் வளரும் தமிழகத்திற்கு முன் மாதிரியாக விளங்கட்டும்.

8-10-60

THE INDIAN EXPRESS LIBRARY
28 AUG 1957
MADRAS.

## இந்நூல் :

திரு. ப. ஜீவானந்தம் அவர்களால் எழுதப்பெற்ற "கலையும் இலக்கியமும்" எனும் இந்நூல், கலை இலக்கியக் கண்ணோட்டத்தில் ஓர் புதிய பார்வை தருகிறது. நல்ல இலக்கியம் என்றால் என்ன? நசிவு இலக்கியம் என்றால் என்ன? கலை இலக்கியத் தரத்தை உயர்த்துவது எப்படி? பொதுமக்கள் விரும்பும் கலை இலக்கியமாகத் திகழ கலைஞர்களும் எழுத்தாளர்களும் ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பன போன்ற சுவை மிக்க செய்திகளடங்கிய சிறந்த கட்டுரைத் தொகுப்பு இது.

NCBH

Wrapper Printed at the Asian Printers, Madras-5.